பக்கங்கள்:- பத்து

Registered as a News paper in Sri Lanka

விலை ரூபா. 6.00

உலகெங்குமுள்ள உங்கள் உறவினர்களுடன்
INTER NET மூலம்
குறைந்த கட்டணத்தில் தொடர்புகொள்ள
இலங்கை முழுவதும் 24 மணிநேரத்தில் துரித தபால்/பொதிகள் சேவை
SRI MURUGAN
TELE COMMUNICATION & AGENCY POST OFFICE
303, K.K.S. ROAD, JAFFNA
T.P : 021-2222670, 2223588
FAX: 2223214
Email-del-smskr@eureka.lk

வலம்புரி
VALAMPURI

சங்கு 04 | வள்ளுவர் ஆண்டு 2034 | சித்திரை 25 | வியாழக்கிழமை | (08.05.2003) | தொலைபேசி ~ 2223378 | ஒலி 140

# பேச்சுக்களில் எடுத்த முடிவுகளை நடைமுறைப்படுத்த வேண்டும்!

## இல்லையேல் சமாதானப் பேச்சுக்கள் தொடராது அகாஷியிடம் பிரபா தெரிவித்ததாக பாலா அறிவிப்பு

(கிளிநொச்சி)

**அரசும் விடுதலைப்புலிகளும் மேற்கொண்ட பேச்சுவார்த்தைகளின் போது எடுக்கப்பட்ட தீர்மானங்கள் நடைமுறைப் படுத்தப்படாத பட்சத்தில் சமாதானப் பேச்சுவார்த்தையில் தொடர்ந்தும் ஈடுபடுவதால் , அதில் எந்தவிதமான பிரயோசனமும் இல்லை. இதனாலேயே பேச்சுவார்த்தையைத் தற்காலிகமாக நிறுத்தி வைத்துள்ளோம். இவ்வாறு விடுதலைப்புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் தெரிவித்துள்ளார்.**

ஜப்பான் விசேட தூதுவர் யசுசி அகாஷி விடுதலைப்புலிகளின் தலைவர் வே. பிரபாகரனை நேற்று சுமார் இரண்டு மணித்தியாலம் வரை கலந்துரையாடிய விடயங்கள் தொடர்பாகவும், தலைவர் பிரபாகரனால் வலியுறுத்திக் கூறப்பட்ட முக்கிய விடயங்கள் தொடர்பாகவும் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் நேற்று நடத்திய செய்தியாளர் மாநாட்டிலேயே மேற்கண்டவாறு அறிவித்துள்ளார்.

அச்செய்தியாளர் மாநாட்டில் அவர்மேலும் தெரிவித்திருப்பதாவது,

தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் வே. பிரபாகரன் ஜப்பான் சிறப்புத் தூதுவர் யசுசி அகாஷியிடம் நடந்துமுடிந்த பேச்சுவார்த்தைகளின் போது எடுக்கப்பட்ட தீர்மானங்கள் எதுவும் இதுவரை நடைமுறைப்படுத்தப்படாமையாலேயே பேச்சுவார்த்தை இடைநிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாக கூறியுள்ளார்.

தமிழ் பேசும் மக்களைப் பொறுத்த வரையில் கடந்த 50 வருடங்களாக தொடர்ச்சியாக பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டிருந்தபோதும் எந்த ஒரு அரசாங்கமும் அப் பேச்சுவார்த்தைகளில் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் தொடர்பாக எந்த வித நடவடிக்கைகளையும் எடுக்கவில்லை. இதே நிலைமை எமக்கு ஏற்படக் கூடாதென்பதாலேயே பேச்சுவார்த்தையை தற்காலிகமாக இடைநிறுத்திவைத்துள்ளோம். இது நாம்

(10ம் பக்கம் பார்க்க)



நேற்றைய சந்திப்பில் ஜப்பான் தூதுவர் அகாஷியை தலைவர் பிரபா கைலாகு கொடுத்து வரவேற்கும் காட்சி.

## பாதுகாப்புச் சபை இன்று அவசரமாகக் கூடுகிறது

(கொழும்பு)

நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள பாதுகாப்பு நிலைவரம் தொடர்பாக ஆராயும் பொருட்டு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா பாதுகாப்புச் சபையை இன்று அவசரமாகக் கூட்டவுள்ளார்.

பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பன மற்றும் முப்படைத் தளபதிகள் பொலிஸ்மா அதிபர் ஆகியோர் இக் கூட்டத்திற்கு அழைக்கப்பட்டுள்ளனர்.

இந்திய முன்னாள் இராணுவத் தளபதி லெப்டினன் ஜெனரல் சதீஸ் நம்பியார், கடற்படையின் பிரதித் தளபதி வைஸ் அட்மிரல் பி.ஜே. ஜேக்கப் ஆகியோர் கொழும்பில் பிரசன்னமாக இருக்கும் வேளையில் ஜனாதிபதியால் கூட்டப்படும் இக் கூட்டத்தில் சதீஸ்நம்பியாரின் அறிக்கை தொடர்பாக ஆராயப்படவுள்ளது. இதேவேளை சதீஸ் நம்பியார் லக்ஸ்மன் கதிர்காமரை இன்று சந்தித்துப் பேசவுள்ளார். (வ)

## ஜப்பான் தூதுவர் அகாஷி பிரபாவுடன் சந்திப்பு!

(கிளிநொச்சி)

தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் வே. பிரபாகரனை ஜப்பான் சிறப்புத் தூதுவர் யசுசி அகாஷி நேற்று சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்.

கொழும்பில் இருந்து விசேட உலங்கு வானூர்தி மூலம் நேற்றுக் காலை கிளிநொச்சியை வந்தடைந்த யசுசி அகாஷி விடுதலைப்புலிகளின் தலைவர் வே. பிரபாகரனை கிளிநொச்சியிலுள்ள விடுதலைப்புலிகளின் நடுவப் பணியகத்தில் சந்தித்துப் பேச்சு நடத்தினார்.

நேற்றுக் காலை 10மணிக்கு ஆரம்பமான கலந்துரையாடலில் ஜப்பான் சிறப்புத் தூதுவர் யசுசி அகாஷியுடன் இலங்கைக்கான ஜப்பான் தூதுவர் ஒட்சுகா, ஜப்பானிய வெளிவிவகார அமைச்சின் தென்கிழக்காசிய பிரிவு அதிகாரியும், விடுதலைப்புலிகளின் சார்பில் விடுதலைப்புலிகளின் தலைவர் வே. பிரபாகரனுடன் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம், அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் திருமதி அடேல் பாலசிங்கம் பொருண்மிய ஆலோசகர் ஜோய் மகேஸ்வரன் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

இச்சந்திப்பின் போது வே. பிரபாகரன் புலிச்சின்னமும் தமிழீழ வரைபடமும் பொறிக்கப்பட்ட நினைவுச் சின்னத்தை யசுசி அகாஷிக்கு வழங்கினார். யசுசி அகாஷியும்

(10ம் பக்கம் பார்க்க)

## தயாரிக்கப்பட்ட அறிக்கை சமாதானத்தை பாதிக்காது

### சதீஸ் நம்பியார் தெரிவிப்பு

(கொழும்பு)

சமாதான முயற்சிகளை பாதிக்காத வகையில் அதியுயர் பாதுகாப்பு வலயங்கள் தொடர்பான அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளதாக இந்திய முன்னாள் இராணுவத் தளபதி லெப்ரினன்ட் ஜெனரல் சதீஸ்நம்பியார் தெரிவித்துள்ளார்.

பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பன தலைமையில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில், இலங்கை ஆயுதப்படைகளின் செயற்பாடுகள் சமாதான முயற்சிகள் தொடர்ந்து நடைபெற வேண்டும் என்ற அடிப்படையிலேயே அமைய வேண்டும். இதனை ஆழமாக புரிந்து கொண்டே நான் செயற்பட்டுள்ளேன். அரசிற்கும் விடுதலைப் புலிகளிற்குமிடையில் ஏற்பட்டுள்ள சமாதான முயற்சிகள் தொடர்பாக என்னால் கருத்துக்கூற முடியாதுள்ளது.

அதியுயர் பாதுகாப்பு வலயங்கள் தொடர்பான அறிக்கை தயாரிக்கும் முயற்சியிலேயே நான் ஈடுபட்டேன்,

(10ம் பக்கம் பார்க்க)

## புலிகள் பங்குபற்றாவிட்டாலும் ஜப்பான் மாநாடு நடைபெறும்!

### தூதுவர் அகாஷி பி.பி.ஸிக்குப் பேட்டி

(கொழும்பு)

டோக்கியோவில் அடுத்த மாதம் நடைபெறவிருக்கும் இலங்கைக்கு நிதியுதவி வழங்கும் மாநாட்டில் விடுதலைப்புலிகள் கலந்துகொள்வதற்கான அறிகுறிகள் இப்போது இல்லை. ஆனால் மாநாடு திட்டமிட்டபடி நடக்கும்.

இவ்வாறு ஜப்பானின் விசேட தூதுவர் யசுசி அகாஷி தெரிவித்துள்ளார். நேற்றையதினம் பிரதமரணிலைச் சந்தித்துப் பேசுவதற்கு முன்னர் பி.பி.சி தமிழோசைக்கு வழங்கிய செவ்வியிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், விடுதலைப்புலிகளுக்குள்ள கவலையை நான்அறிவேன், அந்தக் கவலைகள் குறித்து அரசுடன் கலந்துரையாட அவர்கள் விரும்புகின்றனர். அவர்களது விருப்பம் குறித்து பிரதமருக்கு நான் தெரியப்படுத்த இருக்கிறேன்.

டோக்கியோ உதவி வழங்கும் மாநாட்டை வேறு திகதிக்கு மாற்றுவது என்ற பேச்சுக்கே இடமில்லை. ஜப்பானிய அரசு ஒரு பெரிய அரசு, அவ்வளவு சுலபமாக மாற்றங்களைச் செய்யமுடியாது அது ஒரு கப்பலைப் போன்றது, போகும் பாதையை சுலபமாக திருப்பமுடியாது என்றார் யசுசி அகாஷி.

(த)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

வடக்குக் கிழக்குப் பகுதிகளில்

# இணக்க சபையை அமைக்க அமைச்சரவையில் யோசனை

(கொழும்பு)

வடக்குக்கிழக்கு பிரதேசங்களில் இணக்கசபை அறிமுகப்படுத்தப்படவேண்டும் என்று நாடாளுமன்ற விவகார அமைச்சர் ஏ.எச்.எம். அஸ்வர் தெரிவித்துள்ளார்.

இதன் மூலமாக மக்கள் எதிர்நோக்கும் அழுத்தங்களை குறைக்கமுடியும் என்று இணக்க சபை விசேட பிணக்கு சட்டமூலம் மீதான விவாதத்தில் கலந்து கொண்டு பேசுகையில் அஸ்வர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, இணக்கசபை விசேட பிணக்கு சட்டமூலத்தில் உள்ள குற்றச் செயல்கள் தொடர்பாக இச்சட்டமூலத்தில் தெளிவாக குறிப்பிடப்படவில்லை என மக்கள் விடுதலை முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் நந்தன குணதிலக குற்றம் சாட்டியுள்ளார்.

தேர்தல் வன்முறைகள் மற்றும் அரசியல் பிரச்சினைகளால் ஏற்படும் சிக்கல்களுக்கு இணக்கசபையிடம் முறைப்பாடு செய்தால்அது சிக்கலை தோற்றுவிக்கும் எனவும் இணக்க சபைகளுக்கு வழங்கப்படும் நிதி அதிகரிக்கப்படவேண்டுமெனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (தி)

வர்த்தக நிலையங்கள் முன்பாக

# பொருட்களைக் காட்சிப்படுத்த யாழ். மாநகரசபை அனுமதி

(யாழ்ப்பாணம்)

யாழ். நவீன சந்தையில் உள்ள ஒவ்வொரு வர்த்தக ஸ்தாபனத்தினதும் கதவில் இருந்து இரண்டு அடி முன்னாலும் அதே இரண்டு அடி நேர் மேலும் விளம்பரத்திற்கு பொருட்கள் வைப்பதற்கு அனுமதிப்பது என முடிவுசெய்யப்பட்டுள்ளது.

யாழ. மாநகர சபையில் அண்மையில், யாழ். மாநகர ஆணையாளர், யாழ். வணிகர் கழகத் தலைவர், செயலாளர், நிர்வாக சபை உறுப்பினர்களிடையே இடம்பெற்ற கலந்துரையாடலில் எடுக்கப்பட்ட இம்முடிவு தொடர்பான அறிவுறுத்தலை சம்பந்தப்பட்ட சகல வர்த்தக ஸ்தாபனங்களுக்கும் நேரில் சென்று வழங்குவது எனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய கடந்த செவ்வாயன்று யாழ். நவீன சந்தைக் கடைகளை யாழ். வணிகர் கழக தலைவர், செயலாளர், நிர்வாக சபை உறுப்பினர்கள் மற்றும் யாழ். மாநகர சபை விசேட ஆணையாளர், அவரது உத்தியோகத்தர்கள் பார்வையிட்டு அங்கு நடைபாதைகளில் சாமான்கள் வைத்து வியாபாரம் செய்வது பற்றி கீழ்க்கண்ட அறிவுறுத்தல்கள் வழங்கியுள்ளனர்.

❊. யாழ். நவீன சந்தைத்தொகுதியில் உட்புறமும் வெளிப்புறமும் உள்ள கடைகளின் வாசலின் முன்னால் உள்ள நடைபாதையில் இரண்டு அடிவரை சாமான்கள் வைப்பதற்கும் மேலே தொங்கவிடுவதற்கும் சகல வர்த்தகர்களும் அனுமதிக்கப்பட்டுள்ளார்கள்,

❊. எக்காரணம் கொண்டும் எந்த ஒரு கடையும் எதிர்ப்புறத்தில் எந்தவொருபொருளும் வைக்கக்கூடாது என கண்டிப்பாக அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இதேவேளை, இவ் அறிவுறுத்தலை தவறாது பின்பற்றுமாறும் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. (உ)

## குண நல உள்வீட்டு கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய கோட்டங்களைச் சேர்ந்த அதிபர்கள், பொறுப்பாசிரியர்கள், முகாமைத்துவ உதவியாளர்கள் ஆகியோருடனான குணநல உள்வீட்டு கலந்துரையாடல்கள் இடம்பெற்று வருகின்றன.

இதன் பிரகாரம், கோப்பாய்க் கோட்டத்திற்கான கலந்துரையாடல நேற்று கோப்பாய்கிறிஸ்தவக் கல்லூரியில் இடம்பெற்றது.

யாழ. கோட்டத்திற்கான கலந்துரையாடல் நாளை பி.ப 3 மணிக்கு யாழ். புனித மரியாள் பாடசாலையில் நடைபெறவுள்ளது. (உ-4)


சுன்னாகம்-மயிலணி, திருக்குடவாயில்

ஸ்ரீ விஸ்வநாத சுவாமி தேவஸ்தானம்

(மயிலணி சிவன் கோயில்)

இரண்டாவது உலக இந்து மகாநாடு

இன்று சிறப்பு நிகழ்ச்சிகள்

காலம் : (08-05-2003) வியாழக்கிழமை

நேரம் : மாலை 5.00 மணி

தமிழகத்திலிருந்து வருகைதந்திருக்கும் பேராளர்களின் சிறப்புச் சொற்பொழிவுகள்

சிவதத்துவமும் பெரிய புராணமும்

அ. தமிழரசி (தமிழ் ஆசிரியை)

செந்தமிழரசி

தமிழ்இலக்கியங்களில் நிலையாமை

முனைவர்(திருமதி) கஸ்தூரிராஜா

எம்.ஏ, எம்.பில், பி.எச்டி, பி.எட்

சித்தாந்தஇரத்தினம், இதழியலில்முதுகலைப்பட்டயம்

விரிவுரையாளர் - முதுநிலை அண்ணா ஆதர்ச மகளிர்கல்லூரி - சென்னை

வள்ள லாதீன்வாய்மை

செந்தமிழ்ப்பேரரசி. புலவர் பொன். தெய்வநாயகிசோதி

மங்கையர்க்கரசியார் ஆஸ்ரமம் - சென்னை

திருக்குறள் கூறும் இறைமை

திருக்குறள் திருமதி. லலிதாசுந்தரம் M.A, M.Ed, Dip in Geo, Phd.

திருக்குறள் இல்லம் - சென்னை

மேற்படி நிகழ்வுகளில் இந்து சமய விவகார அலுவல்கள் அமைச்சர் மாண்புமிகு தி. மகேஸ்வரன் அவர்கள் கலந்து கொண்டு சிறப்பிப்பார்கள்

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

நன்றி

மயிலணி
சுன்னாகம்
(7025)

இங்ஙனம்

ஸ்ரீ விஸ்வநாத சுவாமி தேவஸ்தானத்தினர்


## தையல் பயிற்சி

(சுதுமலை)

வடக்குகிழக்கு மாகாண சமூக சேவைகள் திணைக்களத்தால் யாழ். மாவட்ட மக்கள் நலன் புரிச் சங்கத்திற்கு 5 தையல் இயந்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன.

இந்த இயந்திரங்களைக் கொண்டு யாழ். மாவட்டத்தில் முதல் கட்டமாக தெரிவு செய்யப்பட்ட வறுமைக்கோட்டிற்கு கீழ் உள்ள பின்தங்கிய பகுதியில் உள்ள 30 யுவதிகளுக்கு ஆறு மாதகால இலவசப் பயிற்சி வழங்கபபடவுள்ளது.

அண்மையில் கொக்குவிலில் உள்ள மேற்படி சங்கத்தின் தலைமை அலுவலகத்தில் மேற்படி இலவச தையல் பயிற்சி வகுப்புக்களை நல்லூர்ப் பிரதேச செயலாளர் கே. முருகையா மற்றும் நல்லூர் பிரதேச செயலக உதவி பிரதேச செயலரும் திட்டமிடல் பணிப்பாளருமான எஸ். ரவீந்திரசர்மா ஆகியோர் சம்பிரதாய பூர்வமாக ஆரம்பித்து வைத்தனர். (உ-252)

## புதுமுக மாணவர்களுக்கு வரவேற்பு

(வல்வெட்டித்துறை)

வல்வெட்டித்துறை சிதம்பராக் கல்லூரியில், க.பொ.த உயர்தர புகுமுக மாணவர்களை வரவேற்கும நிகழ்வு நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

இந்நிகழ்வில், கல்லூரியின் பழைய மாணவசங்கத்தலைவர் நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.கே. சிவாஜிலிங்கம் கலந்து கொண்டார்.

புதிய மாணவர்களுக்கு வரவேற்பும் விருந்துபசாரமும் அன்றைய தினம் நடைபெற்றது. இக்கல்லூரியின் பழைய மாணவர் சங்கம் இந்த நிகழ்வை ஏற்பாடு செய்திருநதமை குறிப்பிடத்தக்கது. (உ-63)

## நிரந்தர கட்டடம் அமைக்க நிதி

(மருதங்கேணி)

மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பிரிவில் முதல் முதலாக திறக்கப்பட்ட மருதங்கேணி சமுர்த்தி வங்கிக்கு நிரந்தர கட்டடம் அமைப்பதற்கு 10 லட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

தற்சமயம் மருதங்கேணி சமுர்த்தி வங்கி தனியார் கட்டடத்தில் இயங்கிவருகின்றமை குறிப்பிடத்தக்கது. (உ-35)

## உள்ளூராட்சி வாரத்தில் போட்டிகள்

(யாழ்ப்பாணம்)

உள்ளூராட்சி வாரத்தை ஒட்டி நல்லூர் பிரதேச சபைக்குட்பட்ட சனசமூகநிலைய சமாசத்தின் அனுசரணையுடன் முன்பள்ளிகளுக்கு இடையிலான விளையாட்டுப் போட்டி, சனசமூக நிலையங்களின் செயற்றிறன் போட்டி, தாச்சிப் போட்டி, பாடசாலை மாணவர்களுக்கிடையிலான பொது அறிவுப் போட்டி என்பவற்றை நடத்தவுள்ளது. (உ)

## மென்பந்து சுற்றுப்போட்டி

(மண்கும்பான்)

பேர்.:. ஸ்ரார் விளையாட்டுக் கழகத்தின் ஆறாவது ஆண்டு நிறைவை ஒட்டி நடத்தப்பட்டுவரும் மென்பந்துச் சுற்றுப்போட்டிகளில் ஒன்றான திறந்த போட்டியில் இன்று பி.ப 3 மணிக்கு கே.சி.சி விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து பூமா விளையாட்டுக் கழகமும், பி.ப 3.45மணிக்கு பியோ விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து சிக்ஸ் ஸ்ரார் விளையாட்டுக் கழகமும் மாலை 4.30 மணிக்கு விஸ்னு (பி) விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து ஏசியன்(பி) விளையாட்டுக் கழகமும் சிங்கள மகாவித்தியாலய மைதானத்தில் மோதவுள்ளன. (உ-55)

# 10 – 20 வயதிற்கு இடைப்பட்ட அனைவர்க்கும் சின்னமுத்து தடுப்பூசி

(சுதுமலை)

இலங்கையிலுள்ள சிறுவர்களை சின்னமுத்து நோயிலிருந்து பாதுகாக்கும் நோக்குடன் சகல மாவட்டங்களிலும் உள்ள 10 முதல் 20 வயது வரையுள்ள பிள்ளைகளுக்கு சின்னமுத்து தடுப்பூசியை ஏற்றுமாறு சுகாதார அமைச்சின் தொற்று நோயியல் பிரிவு அறிவித்துள்ளது.

முதல் கட்டமாக இவ்வருடம் 10 வயது தொடக்கம் 14 வயதுடைய பிள்ளைகளுக்கு இத்தடுப்பூசி ஏற்றப்படவுள்ளதாகவும் அறிவிக்கப் பட்டுள்ளது.

இது தொடர்பாக சுகாதார அமைச்சின் தொற்று நோயியல் பிரிவு உயர் அதிகாரிகளிடையிலான கலந்துரையாடல் ஒன்று கடந்த வெள்ளிக்கிழமை யாழ். பிரதி மாகாண சுகாதார சேவைகள பணிப்பாளர் அலுவலகத்தில் நடைபெற்றது.

இதில், யாழ்.மாவட்டத்தில் உள்ள அனைத்து சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையின் வைத்திய அதிகாரிகள், பொறுப்பதிகாரிகள் மேற்பார்வை உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டனர்.

இக்கலந்துரையாடலில் தொற்றுநோயியல் பிரிவு வைத்திய அதிகாரி கருத்து வெளியிடுகையில்,

1984ஆம் ஆண்டு தொடக்கம், ஒவ்வோர் ஆண்டும் செப்ரெம்பர் மாத முடிவில் இலங்கையில் உள்ள சகல குழந்தைகளுக்கும் சின்னமுத்து தடுப்பூசி ஏற்றப்பட்டுவருகிறது. ஆனால், கடந்த காலத்தில் சின்னமுத்து பரவுகை தொடர்பான புள்ளிவிபர அறிக்கையின படி 15முதல்20 வயது வரையானோருக்கே இது அதிகம் காணப்படுகின்றமையால் தற்போது இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதென தெரிவித்தார்.

மேலும், இந்தவருடம் 10 -14 வயதுக்குட்பட்டவர்களுக்கும் 2004ஆம் ஆண்டு 15 - 20 வயதுக்குட்பட்டவர்களுக்கும் இத்தடுப்பு மருந்து வழங்கப்படவேண்டும் எனவும் இது வடக்கு-கிழக்கு மாகாணத்திலும் வழங்கப்படவுள்ளதாகவும் ஏனைய பகுதிகளில் செப்டெம்பர், ஒக்டோபர் மாத காலப்பகுதிக்குள் வழங்கப்படதிட்டமிடப்பட்டுள்ளது எனவும் தெரிவித்தார். (உ-252)

# இந்து மாநாட்டை ஒட்டிய சமய அறிவுப் போட்டி முடிவுகள்

(யாழ்ப்பாணம்)

இரண்டாவது உலக இந்து மாநாட்டை ஒட்டி, யா/அரியாலை கிழக்கு அ.த.க. பாடசாலை, யா/ பூம்புகார் அ.த.க. பாடசாலை என்பன இணைந்து நடத்திய சமய அறிவுப் போட்டி முடிவுகள் வருமாறு,

**கீழ்ப்பிரிவு**

முதலாமிடம்: கி. புட்கலா (யா/அரியாலை கிழக்கு அ.த.க. பாடசாலை)

இரண்டாமிடம்: இ. சுகன்யா (யா/அரியாலை கிழக்கு அ.த.க. பாடசாலை)

மூன்றாமிடம் : இ. கஜன்ராஜ் (யா/பூம்புகார் அ.த.க பாடசாலை)

**மத்திய பிரிவு**

முதலாம் இடம் : சி. அமல் காந்த் (யா/ பூம்புகார் அ.த.க. பாடசாலை)

இரண்டாமிடம்: ந. புஸ்பமலர் (யா/அரியாலை கிழக்கு அ.த.க. பாடசாலை)

மூன்றாமிடம்: சி. அஜந்தா (யா/அரியாலை கிழக்கு அ.த.க. பாடசாலை)

த. தவரூபன் யா/அரியாலை கிழக்கு அ.த.க. பாடசாலை) (உ)

# படையினர் விட்டுச் சென்ற வெடிப்பொருட்கள் மீட்பு

(மருதங்கேணி)

மருதங்கேணி உதவி அரசாங்க பிரிவிலுள்ள வத்திராயன் உடுத்துறை ஆகிய பகுதிகளில் வெடிக்கும் நிலையில் இராணுவத்தினர் விட்டுச்சென்ற வெடிபொருட்கள், மனிதநேய கண்ணிவெடி அகற்றும் பிரிவினரால் பாதுகாப்பான முறையில் மீட்கப்பட்டன.

60 மி.மி. எறிகணைகள் - 45, ஆர்.பி.ஜி எறிகணைகள் 9, றொக்கட் எறிகணைகள் - 8, 81 மி.மி எறிகணைகள் -9, 82 மி.மி எறிகணைகள் - 51, வெளிச்சக் குண்டுகள் -3, 152 மி.மி எறிகணை - 1 ஆகியனவே இவ்வாறு மீட்கப்பட்டன. (உ-35)

தமிழ்மொழித் தின

# போட்டி நடைபெறும் தினங்களில் மாற்றம்

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கைத் தமிழ் மொழித் தினப் போட்டிகள் இடம் பெறும் தினங்களில் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

இதன் பிரகாரம், பாடசாலை மட்டப் போட்டிகளை ஜூன் மாதம் 27 ஆம் திகதிக்கு முன்னரும், வலய மட்டப் போட்டிகளை ஜூலை மாதம் 18ஆம் திகதிக்கு முன்னரும் மாகாண மட்டப் போட்டிகளை செம்ரெம்பர் மாதம் முதலாம திகதிக்கு முன்னரும் நடத்தி முடிக்குமாறு சுற்று நிருபம் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, தேசிய மட்டப் போட்டிக்கான விண்ணப்பங்களை செப்ரெம்பர் மாதம் 2ஆம் திகதிக்கு முன்னதாக அனுப்பி வைக்கப்பட வேண்டுமென மனித வள அபிவிருத்தி கல்வி பண்பாட்டு அலுவலக அமைச்சின் மேலதிக செயலாளர் எஸ். தில்லைநடராஜா அறிவித்துள்ளார். (உ-4)

நெக்கோட் திட்டத்தில்

# ஐந்து கிராமங்களில் 675 வீடுகள் திருத்தும்

(தென்மராட்சி)

நெக்கோட் திட்டத்தின் கீழ் தமழர் புனர்வாழ்வுக்கழகம் ஐந்து கிராமங்களில் மொத்தம் 675 வீடுகளைத் திருத்தும் திட்டத்தினை அமுல் செய்யவுள்ளது.

இதன் பிரகாரம் குருநகர், நாவந்துறை, சந்திரபுரம், மருதங்கேணி, கட்டைக்காடு ஆகிய இடங்களில் தலா 135வீடுகள், 75 ஆயிரம் ரூபா செலவில் திருத்தம் செய்யப்படும் என தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் மாவட்ட இணைப்பாளர் எஸ். விக்கினேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

இததிட்டம் மிகவிரைவில் அமுல் படுத்தப்படவுள்ளது. (உ-77)

### இனமோதல்களைத் தவிர்ப்பது குறித்து

# மட்டு.சென்ற ஜப்பானிய விசேட தூதர்

# பல்வேறு தரப்புகளுடனும் ஆராய்ந்தார்

(மட்டக்களப்பு)

மூதூரில் இடம்பெற்ற அசம்பாவி தங்களின் போது பாதிக்கப்பட்ட தமிழ்-முஸ்லிம் மக்களின் நிலைமை மற்றும் இவ்வாறான சம்பவங்கள் நடைபெறுவதற்கான காரணிகள் பற்றிய விடயங்களை நேரடியாக கேட்டறிந்து கொண்டுள்ள ஜப்பா னின் இலங்கைக்கான விசேட தூதுவர் யசூசி அகாஷி இத் தகைய சம்பவங்கள் இனியும் நடைபெறாது இருக்க எதிர் காலத்தில் எடுக்கவேண்டிய நடவடிக் கைகள் குறித்தும்தம்முடன் கலந்து பேசியதாக முஸ்லிம் காங்கிரஸ் கட்சித்தலைவரும்கப்பல் துறைமுக அபிவிருத்தி அமைச்சருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

சமாதான பேச்சில் மீண்டும் புலிகளை ஈடுபட செய்வதற்கு டோக்கி யோவில் நடைபெறும் உதவி வழங்கும் மாநாட்டில் புலிகள் கலந்து கொள்ளும்வகையிலும் பேச்சுக்களை நடத்தவென கடந்த 3ஆம் திகதி இலங்கை வந்துள்ள ஜப்பானிய விசேட தூதுவர் யசூசி அகாஷி நேற்று முன்தினம் மட்டக்களப்பிற்கு விஜயம் செய்திருந்தார். இவரது விஜயம் தொடர்பாக கருத்து வெளி யிடுகையிலேயே ஹக்கீம் மேற்கண்ட வாறு தெரிவித்தார்.

மேலும் கருத்துக்கூறிய ஹக்கீம் மட்டக்களப்பிற்கு விஜயம் செய்த அகாஷியை போர் நிறுத்த கண் காணிப்புக்குழு உறுப்பினர்கள் முஸ் லிம் மற்றும் தமிழ் பிரமுகர்கள் இராணுவ உயர் அதிகாரிகள் ஆகி யோரை சந்தித்து பேசியுள்ளார்கள்.

தமிழ் முஸ்லிம்களின் பாதுகாப்பு பிரச்சினைகள் பற்றியும் அரசு மற்றும்புலிகள் தரப்பில் சட்டத் தையும் ஒழுங்கையும்முறையாக நிலை நாட்ட தவறியமை பற்றியும் நாம் அவரிற்கு எடுத்து விளக் கினோம்.

அரசிற்கும் -விடுதலைப் புலி களுக்குமிடையில் வெற்றிகரமாக நடைபெற்று வந்த சமாதான பேச்சு வார்த்தையில் இருந்து புலிகள் விலகிக்கொண்டதால் ஏற்பட்டுள்ள பாதிப்புக்கள் குறித்தும் அவரிற்கு விரிவாக விளக்கினோம்.

அதே சமயம் எதிர்வரும் யூன் மாதம் டோக்கியோவில் நடைபெற வுள்ள இலங்கைக்கு உதவி வழங்கும் மாநாட்டில் புலிகள் கலந்து கொள் ளாது விட்டால்,தமிழ், முஸ்லிம்களிற்கு முன்பு ஏற்பட்ட பாதிப்புக்களுக்கான இழப்பீடுகள் முறையாக கிடைப்பது என்பது கேள்விக் குறியாகவே இருக்கும்.

என்பதையும் ஜப்பானிய விசேட தூதுவரிடம் சுட்டிக்காட்டினோம்..

இதை தவிர தமிழீழ விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டு பிரதேசத் தில் உள்ள விவசாய நிலங்களை முஸலிம் விவசாயிகளிடம் கையளித் துள்ளமையையிட்டு அவர்கள் மிக்க மகிழ்ச்சி அடைந்துள்ளார்கள் எனவும்,

இதேபோன்று அம்பாறை,திரு கோணமலை மாவட்டங்களிலும் உள்ள விவசாய நிலங்களை கைய ளிப்பது தொடர்பாக விடுதலைப் புலிகளுடன் விரைவில் முஸ்லிம் விவசாயிகள் பேச்சு நடத்தவுள்ள னர் என்றும் அமைச்சர் ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.(உ-10)

## கூட்டம்

(சில்லாலை)

பருத்தித்துறை ஊற்று நிறுவனத் தில் சிறுவர் பாதுகாப்பு நிதியத்தின் ஏற்பாட்டில் இன்று வியாழக்கிழமை மு.ப. 9 மணிக்கு 'வருமான அதிகரிப புத்திட்டம் ' தொடர்பான கூட்டம் ஒன்று நடைபெறவுள்ளது.(உ-58)

## துடுப்பாட்டப் போட்டி

(யாழ்ப்பாணம்)

இலங்கைப் பாடசாலைகளின் துடுப்பாட்ட சங்கம் அகில இலங்கை ரீதியில் நடாத்தும் 'அஸ்ரா' வெற் றிக்கிண்ண 16வயதுக்கு கீழ்ப் பட்டோருக்கான துடுப்பாட்டப் போட்டியின் முதல் சுற்று நாளை ஆரம்பமாகவுள்ளது.

நாளைய தினம் மானிப்பாய் இந்துக்கல்லூரி எதிர் கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயம் மானிப் பாய் இந்துக்கல்லூரி மைதானத் திலும்,

பருத்தித்துறை ஹாட்லி கல்லூரி எதிர் சென் ஜோன்ஸ் கல்லூரி ஹாட்லி கல்லூரி மைதானத்திலும் மோதவுள்ளன. (உ)

# கலங்கரை விளக்கின்றி

# மீனவர்கள் கலக்கம்

(மருதங்கேணி)

மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள மணற்காடு தொடக்கம் வெற்றிலைக் கேணி வரையிலான கடற்கரைப்பிரதேசத் தில் கலங்கரை விளக்கு இல்லாது கடற்தொழிலாளர்கள் கஷ்டப்படுவ தாக தெரிவிக்கப்படுகிறது.

சமாதானச் சூழ்நிலை ஏற்பட்ட பின் இரவு நேர மீன்பிடிக்கு அனுமதி அளிக்கப்பட்டதிலிருந்து வள்ளங்கள், தும்புக் கண்ணாடி வள்ளங்கள் இரவு நேர மீன்பிடியில் ஈடுபட்டுள்ளன.

எனினும் இரவு நேர மீன்பிடி யல் ஈடுபடும் கலங்கள் கரை திரும்பு வதற்கு இந்த வெளிச்ச வீடுகள் இன்றியமையாதது என தெரிவிக்கப்படு கிறது.

அண்மையில் வத்திராயனில் இருந்து மீன்பிடிக்கச் சென்ற 4 தும்புக்கண்ணாடி வள்ளங்கள் புயல் காற்றினால் அள்ளுண்டு திசை தெரியாமல் சென்று அடுத்த நாள் கரை திரும்பியதும் தெரிந்ததே.

பருத்தித்துறைமுனையிலுள்ள கலங்கரை விளக்கு உள்ள இடம் கடற்படையினரின் பாதுகாப்பில் இருப்பதால் அதன் பயனை மீனவர் கள் பெற்றுக்கொள்ளமுடியவில்லை.

இதேவேளை ,வடமராட்சி கிழக் கில் வெற்றிலைக்கேணியிலுள்ள கலங்கரை விளக்கை செயற்படு வைக்க நடவடிக்கை எடுக்குமாறு கடற்றொழிலாளர் சார்பில் கோரிக்கை விடப்பட்டுள்ளது. (உ-35)

# சர்வதேச சமாதானத்துக்கு சவாலாகவுள்ள விடயங்கள் கண்டறியப்படவேண்டும்

### ஜனாதிபதி சந்திரிகா கருத்து

(கொழும்பு)

சர்வதேச நாடுகளின் சமாதானத் துக்கும் ,பாதுகாப்புக்கும் அச்சுறுத் தலாக அமையக்கூடிய விடயங்கள் கண்டறியப்பட்டு ,ஐக்கிய நாடுகள் சபைமூலம் அவற்றிற்கு தீர்வு காணப்படவேண்டும் என ஜனாதி பதி சந்திரிகா பண்டாரநாயக்க குமார துங்க தெரிவித்துள்ளார்.

மாலைதீவு ஜனாதிபதி மௌமூன அப்துல் கையூமுக்கு நேற்று முன்தினம் நடத்திய உத்தியோகபூர்வ விருந்துபசார நிகழ்வில் கலந்து கொண்டபோது ஜனாதிபதி இவ் வாறு தெரிவித்துள்ளார்.

அந் நிகழ்வில் தொடர்ந்து ஜனாதி பதி கருத்து தெரிவிக்கையில், ஐக்கிய நாடுகளின் அதிகாரமும், தனித்துவமும் உறுதி செய்யப் படவேண்டும். அண்மைக்காலங் களாக சர்வதேச அரசியலில் இடம் பெற்று வரும் விடயங்கள் மிகவும் மேசமான விளைவுகளை ஏற்படுத் தக்கூடிய வகையில் உள்ளன.

இதேவேளை,சார்க் சபையின் நடவடிக்கைகள் மிகவும் வெற்றி கரமாக முன்னெடுப்பதற்கு இலங்கை தனது பூரண ஒத்துழைப்பை வழங்கு வதுடன் ஐக்கிய நாடுகள் சபை மற்றும் சர்வதேச அமைப்புக்களுக்கு இலங்கை வழங்கி வரும்ஆதரவு தொடரும்.

மாலைதீவுக்கும் இலங்கைக் கும் இடையிலான தொடர்புகள் வலுப் பெற்று வருவதோடு,இரண்டு நாடுகளும் ஒன்றுக்கொன்று தொடர்ந்தும் பூரண ஒத்துழைப் பையும், ஆதரவையும் வழங்கக் கூடிய வாய்ப்புக்கள் அதிகரித்து வருகின்றன என்றார்.

இலங்கையுமாலைதீவும் 1965ஆம் ஆண்டு யூலை மாதம் 26ஆம் திகதி சம்பிரதாய பூர்வமாக இராஜதந்திர உறவுகளை ஏற்படுத்திக் கொண் டதையும் இச் சந்தர்ப்பத்தில் ஜனாதி பதி நினைவு கூர்ந்தார். (தி)

## ஆரம்பக்கணித மாநாடு

(யாழ்ப்பாணம்)

ஆரம்பக் கல்வி கற்பிக்கும் ஆசி ரியர்களுக்கான கணித மாநாடு ஒன்றை நடாத்த தேசிய கல்வி நிறுவகத்தின் ஆரம்பக்கல்வி வழங் கல் பிரிவு தீர்மானித்துள்ளது.

இதன் கீழ் எதிர்வரும் 16 ஆம்திகதி வெள்ளிக்கிழமை கோப் பாய் ஆசிரியர் பயிற்சி கலாசாலை யில் காலை 9மணி தொடக்கம் மாலை 4 மணி வரை மேற்படி மாநாடு நடைபெறவுள்ளது.(உ-4)

## தரப்படுத்தல் பரீட்சை

(கல்வியங்காடு)

இலங்கை திறந்த பல்கலைக் கழக யாழ்ப்பாண பிராந்தியநிலை யத்தில் விஞ்ஞானமாணி கற்கை நெறிக்கு விண்ணப்பித்த புதிய மாணவர்களுக்கான கணித பாட தரப்படுத்தல் பரீட்சை எதிர்வரும் 11ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10 மணிக்கு யாழ்.பிராந்திய நிலையத்தில் நடைபெறும் என இயக்குநர் எஸ்.ஞானேந்திரன் அறிவித்துள்ளார். (உ-54)

# வடபகுதி முகாம்களை இடம் மாற்றுவதில் ஜனாதிபதிக்கு உடன்பாடு கிடையாது

### ஊடகப் பேச்சாளர் ஹரீம் பீரிஸ் தெரிவிப்பு

(கொழும்பு)

சமாதானப் பேச்சுக்களில் உரிய இணக்கப்பாடுகள் ஏற்படும் வரை வடக்கு-கிழக்கு மாகாணங்களில் உள்ள இராணுவ முகாம்களை தற்போதைய இடங்களில் இருந்து மாற்றுவது உசிதமானது அல்ல என ஜனாதிபதி சந்திரிகா பண்டார நாயக்கா குமாரதுங்க கருதுவதாக ஜனாதிபதியின் ஊடகப் பேச்சாளர் ஹரீம் பீரிஸ் தெரிவித்துள்ளார்.

நேற்றுக் காலை ஜனாதிபதி மாளிகையில் நடந்த செய்தியாளர் மாநாட்டில் ஹரீம் பீரிஸ் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அச்செய்தியாளர் மாநாட்டில் தொடர்ந்து கருத்துத் தெரிவித்த ஹரீம் பீரிஸ்,

வடக்கு-கிழக்குப் பிரதேசங்க ளில் உள்ள இராணுவ முகாம்களை வேறு இடங்களுக்கு மாற்றுவதால் அது பாதுகாப்புத் தொடர்பான சிக்கல்களை ஏற்படுத்தும்.

யாழ். நகரில் உள்ள இராணுவ மற்றும் பொலிஸ் நிலையங்களை வேறு இடங்களுக்கு மாற்றுவது தொடர்பாக அராசாங்கம் தீர்மா ணங்கள் எதனையும் எடுக்கவில்லை.

இப்பிரதேச இராணுவ மற்றும் பொலிஸ் நிலையங்களை மாற் றுவது தொடர்பான விடயத்தில் ஜனாதிபதி கூடுதல் கவனம் செலுத் தியுள்ளார்.

இதேவேளை, இராணுவப் புல னாய்வுப் பிரிவினரின் பாதுகாப் பினை அரசாங்கம் உறுதி செய் யாத காரணத்தால் மோசமான விளை வுகள் ஏற்பட்டுள்ளன.

அண்மைக்காலங்களாக புலனாய் வுப் பிரிவு உறுப்பினர்கள் இனந் தெரியாத நபர்களினால் சுட்டுக் கொல்லப்பட்டு வருகின்றனர். இவர் களுக்கு வேண்டிய பாதுகாப்பை யும் வழங்க அரசாங்கம் தவறி யுள்ளது எனவும் அவர் குற்றம் சாட்டியுள்ளார். (தி)

# மீளக்குடியமர்ந்த மக்களுக்காக 175 வீடுகள் அமைப்பு

(மருதங்கேணி)

மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பிரிவில் வெற்றிலைக் கேணி, கட்டைக்காடு ஆகிய பகுதிகளில் உள்ள மீளக் குடியமர்ந்த மக்களுக்காக 175 வீடுகளை அமைக்க ஜி.ரி.சற் தீர்மானித்துள்ளது.

இந்த வகையில் வெற்றிலைக் கேணியில் 75 வீடுகளும் கட்டைக் காட்டில் 100 வீடுகளும் கட்டிக் கொடுப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள் ளது.

இப் பயனாளிகளை தெரிவு செய் யும் கூட்டம் மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் வி.ப.வேலாயு தபிள்ளை தலைமையில் ஜி.ரி.சற் நிறுவன உயர் அதிகாரிகள் அவ் வப்பகுதி கிரமசேவகர் முன்னிலை யில் அண்மையில் இடம்பெற்றது. (உ-35)

### பல்கலைக்கழகங்களின்

# நிர்வாகச் சீர்கேடுகளே நெருக்கடிகளுக்குக் காரணம்

### கபீர் ஹாசிம் தெரிவிப்பு

(கொழும்பு)

கடந்த காலங்களில் நிலவிய நிர்வாகச்சீர்கேடுகளே ,சில பல்கலைக் கழகங்களில் நெருக்கடியான நிலை மைகள் தோன்றுவதற்கு காரண மாக அமைந்ததாக 3ஆம் நிலைக் கல்வி அமைச்சர் கபீர் ஹாசிம் தெரிவித்துள்ளார்.

பாராளுமன்ற கூட்டத் தொகு தியில் நேற்று முன்தினம் இடம் பெற்ற பல்கலைக்கழக மாணவப் பிரதிநிதிகள், எதிர்க்கட்சித் தலைவா, பலகலைக்கழக மானியங்கள்ஆணைக குழு அதிகாரிகள ஆகியோர் கலந்து கொண்ட மாநாட்டிலேயே அமைச்சா இதனைத் தெரிவித்துள்ளார்.

பல்கலைக்கழகங்களில் நிலை்ர.

நெருக்கடிகளை சுலபமாக தீர்த்து வைக்கக்கூடிய வழிமுறைகள் குறித்து தற்போது ஆராயப்பட்டு வருவதா கவும் அமைச்சர் மேலும் தெரிவித் துள்ளார். (தி)

## பரீட்சை

(யாழ்ப்பாணம்)

தீவக கல்வி வலயத்தில் ஆங் கிலப் பாடம் கற்பிக்கும் (பகுதி நேர ஆங்கில ஆசிரியர் உட்பட )ஆசிரியர் களுக்கான பரீட்சை இன்று வியாழக்கிழமை பி.ப. 2 மணிக்கு யாழ். வேலணை சுரஸ்வதி வித்தியாலயத் தில் நடைபெறும்என வலயக்கல்விப் பணிப்பாளர் பொ.வேணுகோபால் அறிவித்துள்ளார் (உ)

### சீருடைத் துணி விநியோகம் விரைவில் பூர்த்தி

(யாழ்ப்பாணம்)

2003ஆம்ஆண்டுக்கான பாட சாலை சீருடைகளின் கூட்டுறவுச் சங்கங்களின் மூலமான விநியோகித் தலை இம்மாதம் 15ஆம் திகதி யுடன் முடிக்கப்பட வேண்டும் என்று கல்வி அமைச்சு தீர்மானித்துள்ள தால் 31.12.2002 வரை பாடசாலை சீருடைக்காக விண்ணப்பங்களை சமர்ப்பித்த யாழ்ப்பாண பிரதேச செயலர் பிரிவைச்சேர்ந்த மாணவர் களுக்கான கூப்பன்கள் கிடைக்காத பெற்றோர் பிரதேச செயலகத்தில் அவர்களுக்குரிய கூப்பன்களை பெற்றுக் கொள்ளும்படியும்,

அக் கூப்பன்களை உபயோ கித்து இம்மாதம் 15ஆம் திகதிக்கு முன் அவர்களுக்குரிய கூட்டுறவுக் கிளைகள் மூலம் சீருடைத் துணி களை பெற்றுக்கொள்ளும்படி யம் கேட்கப்பட்டுள்ளது. (உ)

### தேர்தல் கால வன்முறை

# விசாரணைகளை துரிதப்படுத்த உள்துறை அமைச்சு உத்தரவு

(கொழும்பு)

இதுவரை விசாரணைகளுக்கு உட்படுத்தப்படாத தேர்தல் வன் முறைகள் தொடர்பாக உடனடி யாக விசாரணைகளை ஆரம்பிக்கு மாறு உட்துறை அமைச்சர் பொலி ஸாருக்கு உத்தரவிட்டுள்ளார்.

கடந்த பொதுத்தேர்தல் காலத் தில் இடம் பெற்ற வன்முறைகள் தொடர்பாக நடவடிக்கைகளை மேற் கொள்ளும் பொருட்டு குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது.

இந்த குழுவில் எதிர்க்கட்சித் தலைவர் ம்கிந்த ராஜபக்ஷவும் அடங்குவதுடன்,குழுவின் செயற் பாடுகள் குறித்து அவர் திருப்தி கொண்டுள்ளதாக உட்துறை அமைச் சர் தெரிவித்துள்ளார்.

கடந்த 2000ஆம் ஆண்டு பொதுத்தேர்தலின் பொது நடை பெற்ற வன்முறைச் சம்பவங்கள் தொடர்பாக 5ஆயிரம் முறைப்பாடு கள் இதுவரை விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படாமல் இருப்பதா கவும் அமைச்சர் சுட்டிக்காட்டி யுள்ளார். (தி)

# ஈராக்கின் சிவில் நிர்வாகத்தை கவனிக்க புதிய அதிகாரியை புஷ் நியமித்தார்

## சதாம் உயிருடன் இருப்பதாக டுபாயிலிருந்து அதிர்ச்சித் தகவல்

(வாஷிங்டன்)

**ஈராக்கின் சிவில் நிர்வாகத்தைக் கவனிப்பதற்காக அமெரிக்கா புதிய அதிகாரி ஒருவரை நியமித்துள்ளது.**

**தற்போது ஈராக்கில் தற்காலிக நிர்வாகியாகவிருக்கும் ஜேகார்னரிடமிருந்து அடுத்த வாரம் புதிய அதிகாரி நிர்வாகத்தைப் பொறுப்பேற்றுக் கொள்வார்.**

இதற்கிடையில் ஈராக்கில் பதவி கவிழ்க்கப்பட்ட அதிபர் சதாம் ஹுசைன் இன்னமும் ஈராக்கிலேயே பத்திரமாக இருந்து வருவதாக டுபாயிலிருந்து கிடைத்துள்ள செய்திகள் கூறுகின்றன.

ஈராக்கின் புதிய சிவில் நிர்வாக அதிகாரியாக வோல் பிறேமரை அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் டபிள்யு புஷ் நியமித்துள்ளார்.

இவர் இராஜாங்கத் திணைக்களத்தின் பயங்கரவாதத்திற்கு எதிரான பிரிவின் முன்னாள் தலைவராக செயல்படுவார். பாதுகாப்பு அமைச்சர் டொனால்ட் ரம்ஸ்பீல்ட், இராஜாங்க செயலாளர் கொலின் பவல், தேசிய பாதுகாப்பு ஆலோசகர் மென் கொண்லீலாரைஸ் ஆகியோர் முன்னிலையில் வெள்ளை மாளிகை அலுவலகத்தில் வைத்து பிரேமரை ஜனாதிபதி புஷ் இந்தப் பதவிக்கு நியமித்தார்.

அடுத்த வாரம் ஈராக் செல்லவுள்ள பிரேமர் ஈராக்கின் தற்காலிகமாக நிர்வாகியாக நியமிக்கப்பட்ட ஓய்வு பெற்ற இராணுவஜெனரல் ஜே கார்னரிடம் இடம்இருந்து நிர்வாகப் பொறுப்புக்களை கையேற்றார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

**ஈராக்கிலேயே சதாம இருக்கிறார்**

ஈராக்கிய அதிபர் பதவியிலிருந்து அகற்றப்பட்ட சதாம் ஹுசைன் ஈராக்கில் பத்திரமாக இருக்கிறார் என்று டுபாயில் இருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

அமெரிக்கா தலைமையிலான கூட்டணிப் படைகளை எதிர்க்க அவர் ஆதரவு திரட்டி வருவதாகவும் கூறப்படுகின்றது.

ஈராக்கில் இருந்து வெளியேறிய தலைவர்களும் பத்திரமாக இருக்கின்றார்கள் என்று யேமன் அரபு சோசலிச பாத் கட்சியின் தலைமைச் செயலர் காசம் ஷாலன் ஒரு பேட்டியில் தெரிவித்தார். (பி-9)

# உறவுகளை இயல்பாக்க பாக்.பிரதமர் விருப்பம்

(இஸ்லாமபாத்)

இந்தியாவுடனான போக்குவரத்து மற்றும் விளையாட்டுத்துறை உறவுகள் மீண்டும் முழுமையாக வழமை நிலைக்குக் கொண்டு வரப்படுவதை பாகிஸ் தான் பிரதமர் ஷபருல்லா ஹான் ஜமாலி ஆதரித்துள்ளார்.

இரண்டு நாடுகளுக்கும் இடையே நீண்டகாலமாக நிலவி வருகின்ற அரசியல் முரண்பாடுகளை முடிவிற்குக் கொண்டு வரும் முன்னோடி முயற்சியாக இது அமையும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்தியாவிற்கும் பாகிஸ்தானிற்கும் இடையேயான இராஜதந்திர உறவுகளை ஆராய ஆகாய மார்க்க போக்குவரத்துத் தொடர்புகளையும் வழமை நிலைக்குக் கொண்டு வர வேண்டும் என்று இந்தியப் பிரதமர் அடல் பிஹாரி வாஜ்பாய் கடந்த வாரம் தெரிவித்திருந்தார்.

இதனை இட்டு கருத்துத் தெரிவித்த பாகிஸ்தான் பிரதமர் தெற்காசியாவில் அணுத்திட்டம் மற்றும் நிலையான ஸ்திரத்தன்மை என்பன குறித்து 2 நாடுகளும் ஆழமான பேச்சுவார்த்தைகளை நடத்த வேண்டும என்றும் கூறியுள்ளார்.

எவ்வாறாயினும் காஷ்மீர் விவகாரமே முக்கிய இடத்தை வகிப்பதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (பி-9)

## சட்ட விரோத குடியேற்றவாசிகளைத் தடுக்க

# ஐரோப்பிய நாடுகளுக்குச் செல்பவர்களுக்கு புதிய முறையிலான கடவுச்சீட்டுகள்

(லண்டன்)

ஐரோப்பிய நாடுகளின் எல்லைகளின் ஊடாக சட்டவிரோதமாக வெளிநாட்டவர் நுழைவதைத் தடுக்கும் நடவடிக்கையாக கடவுச்சீட்டில் புதிய தொழில் நுட்ப முறைகளை அறிமுகப்படுத்த பிரிட்டன் உத்தேசித்திருக்கின்றது.

கடந்த சில வாரங்களாக கடவுச்சீட்டு மோசடிகள் தொடர்பான தகவல்கள் வெளிவந்த நிலையில் இதனை பிரிட்டன் உட்பட அயல் நாடுகளிலும் இம்முறையைப் பின்பற்ற வேண்டும் என பிரிட்டனின் உள்துறை அமைச்சர் டேவிற்பிளான்கேட் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

பரிஸில் ஆரம்பமாக இருக்கின்ற ஜீ.8 நாடுகளின் மாநாட்டில் புதிய தொழில் நுட்ப கடவுச்சீட்டு முறை ஏனைய நாடுகளும் பின்பற்ற வேண்டும் என தாம் வலியுறுத்தப் போவதாக பிரிட்டன் தெரிவித்துள்ளது.

இதன் படி வெளிநாட்டவர்கள் தமது நாடுகளுக்குள் நுழையும் போது அவர்களது கண்களைச் சுற்றி பிரதிவிம்பம் கணனிகளின் உதவியுடன் பதிவு செய்யப்படும்.

பின்னர் இவர்களது கடவுச்சீட்டு விசேட கருவிக்குள் செலுத்தப்பட்டு கணனியின் மூலம் பெறப்பட்ட பிரதிவிம்பம் ஒப்பிடப்பட்டு இவர்கள் கடவுச்சீட்டு மோசடியில் ஈடுபட்டார்களா என கண்டறியப்படும்.

செப்ரம்பர் 11 ஆம் திகதி தாக்குதலுக்குப் பின்னர் அதிகரித்துள்ள தீவிரவாத அச்சம் காரணமாகவே இவ்வாறான புதிய கடவுச்சீட்டு முறைமை அறிமுகப்படுத்தப்படுகின்றது.

2006 ஆம் ஆண்டளவில் கடவுச்சீட்டுக்களில் அதனை வைத்திருப்பவர்களின் கண்களின் பிரதிவிம்பம் பதிவு செய்யப்படும் முறை நடைமுறைக்கு வரும் என்று தாம் எதிர்பார்ப்பதாக டேவிற் பிளங்கேட் தெரிவித்துள்ளார். (பி-9)

## ரஷ்ய-அமெரிக்க விஞ்ஞானிகள்

# செவ்வாய்க்கிரக ஆராய்ச்சியில் இணைந்து செயல்பட இணக்கம்

(மாஸ்கோ)

செவ்வாய்க் கிரகத்துக்கு ஆளில்லாத விண்கலத்தை அனுப்பும் திட்டத்தை அமெரிக்காவும், ரஷ்யாவும் இணைந்து முன்னெடுக்க இருக்கின்றன.

அமெரிக்காவும் நாஸா விண்வெளி ஆராட்சி மையத்தின் பிரதிநிதியும் ரஷ்யாவின் விண்வெளி நிறுவனத்தின் பிரதிநிதியும் நேற்று முன்தினம் மொஸ்கோவில் சந்தித்த போது இதற்கான இணைக்கப்பாடு எட்டப்பட்டுள்ளது.

இந்தச் சந்திப்பின் போது சர்வதேச விண்வெளி மையம் குறித்தும் இருதரப்பினரும் பேச்சுவார்த்தை நடத்தியிருக்கின்றார்கள்.

சர்வதேச விண்வெளி பயணத்திற்கு ரஷ்யாவின் உதவியை அமெரிக்கா நாடியுள்ள நிலையில் இந்த சந்திப்பு முக்கியத்துவம் பெறுகின்றது.

கடந்த பெப்ரவரி மாதம் கொலம்பிய விண்கல விபத்து நடை பெற்றதில் இருந்து ரஷ்ய விண்வெளிக் கலத்தையே சர்வதேச விண்வெளி மையத்திற்கான பயணத்திற்கு அமெரிக்கா நாடியுள்ளது.

ஆனால் சர்வதேச விண்வெளி மையத்திற்கு அமெரிக்கா போதிய நிதிப்பங்கீடு செய்யவில்லை என்றும் அந்த நிலை தொடர்ந்தால் அந்த நாட்டுடனான விண்வெளிக் கூட்டு நடவடிக்கையைத் தாம் கைவிட வேண்டி வரும் என்றும் ரஷ்யா எச்சரித்து வந்ததும்இங்கு குறிப்பிடத்தக்கது.(பி-9)

## சார்ஸ் நோயாளிகளை தனிமைப் படுத்துவதற்கு எதிர்ப்பு

(பெய்ஜிங்)

சார்ஸ் நோய் பாதிப்பு இருப்பவர்களைத் தனியிடத்தில் அடைத்து வைக்க ஏற்பாடு செய்த சீன அதிகாரிகளை விவசாயிகள் கடுமையாகத் தாக்கினர்.

இச்சம்பவம் கடந்த சனிக்கிழமை இரவு ஜெஜியாங் மாகாணத்தில் நிகழ்ந்தது. அப்பகுதியில் உள்ள சமுதாய நலக் கூடத்தை சார்ஸ் பாதித்தவர்கள் தங்குவதற்கான இடமாக மாற்ற அதிகாரிகள் ஏற்பாடு செய்து வந்தனர். இதையறிந்த 100க்கும் மேற்பட்ட விவசாயிகள் ஒன்று திரண்டு அங்குள்ள அரசு அலுவலகத்தில் குவிந்தனர். 3 அதிகாரிகளை அடித்து உதைத்தனர். விவசாயிகள் நடத்திய தாக்குதலில் அரசு அலுவலகம் சேதமடைந்தது.

இது தொடர்பாக விவசாயிகள், தலைவர்கள் இருவர் கைது செய்யப்பட்டனர்.

சார்ஸ் தனியிடத்துக்கு எதிர்ப்பு தெரிவித்து கடந்த வாரம் பெய்ஜிங் அருகே ஒரு பள்ளிக்கட்டடத்தை கிராம மக்கள் தீயிட்டு நாசப்படுத்தினர். அங்கிருந்த அரசு அலுவலகத்தையும் சேதப்படுத்தினர்.

சார்ஸ் பாதிப்பு இருக்கலாம் என்ற அச்சத்தின் காரணமாக ஹொங் கொங் மருத்துவமனையில் சோதனைக்கு அனுமதிக்கப்பட்டிருந்த 10 இந்தியர்கள் கடந்த ஞாயிற்றுக்கிழமை கப்பலுக்குத் திரும்பினர். (பி)

## பழங்குடி மக்கள் எதிர்ப்பால்

# பல கோடி ரூபாய் மதிப்பான யுரேனியம் முடங்கிக் கிடக்கிறது

(புதுடில்லி)

வடகிழக்கு இந்தியாவில் மேகாலயா மாநிலத்தில் ஏராளமான உயர் ரக யுரேனியப்படிவுகள் இருக்கின்றது. இந்த யுரேனியப் படிவுகள் பெறுமதி மிக்கவையாகவும் அணு ஆராய்ச்சியில் மிக முக்கிய மூலப்பொருளாகவும் கருதப்படுகின்றது.

ஆனால் இந்த யுரேனியப் படிவுகள் வெட்டியெடுக்கும் போது ஏற்படுத்தும் கதிரியக்கத் தாக்கங்களினால் அப்பகுதி மக்கள் பாதிக்கப்படலாம் என்ற அச்சம் பரவியுள்ளது. அதனால் யுரேனியம் வெட்டி எடுக்கப் போகும் அதிகாரிகளையும் பணியாளர்களையும் அப்பகுதியிலுள்ள காஸி எனப்படும் பழங்குடி மக்கள் அடித்துத் துரத்தி விடுகிறார்கள்.



யுரேனிய கதிரியக்கத்தினால் பாதிக்கப்பட்டுள்ள சிறுவன்.

இந்தியாவின் யுரேனியம் கூட்டுத்தாபனம் தீட்டியுள்ள 100 மில்லியன் டொலர் திட்டம் இந்த பழங்குடி மக்களின் பயங்கரமான எதிர்ப்பியக்கத்தினால் முடங்கிக் கிடக்கின்றது.

யுரேனியப் படிவுகள் உள்ள சுரங்கப் பகுதிக்கு நாங்கள் எப்பொழுது சென்றாலும் அவர்கள் வில், அம்பு,வாள் போன்றவற்றைக் கொண்டு தாக்க வருகிறார்கள் என்று மேற்படி கூட்டுத்தாபன அதிகாரி ஒருவர் கூறினார்.

எங்களை மரணத்தின் முகவர்கள் என்று அழைக்கிறார்கள். யுரேனியம் எடுக்க முயன்றால் கொல்லுவோம் என்று அச்சுறுத்துகிறார்கள் என்று அவர் மேலும் கூறினார்.

மேகாலயாவில் காஸி மேற்கு மலைப்பகுதியில் யுரேனியம் வெட்டி எடுக்கப்படுமானால் அப்பிரதேசத்தில் குறிப்பாக உள்கட்டமைப்புத் துறையில் பாரிய முன்னேற்றங்கள் ஏற்படும் என்று இந்தக் கூட்டுத்தாபனம் கருதுகின்றது.

ஆனால் உள்ளூர் பழங்குடியினர் விடாப்பிடியாக எங்களைத் தடுத்து வருகிறார்கள் என்றார் அந்த அதிகாரி.

''எங்கள் யுரேனியம் இந்தியாவுக்குத் தேவையென்பதற்காக எமது மக்கள் துன்பமுறமுடியாது. முதலில் எமது மக்கள் அதற்குப் பிறகு தான் இந்தியா'' என்று பழங்குடி தலைவர் ஒருவர் கூறினார். (பி.பி.ஸி)

### பெண்களுக்கு இடம் ஒதுக்கும் மசோதா ஒத்தி வைப்பு

(புதுடில்லி)

பாராளுமன்றம் மற்றும் சட்ட சபை போன்றவற்றில் பெண்களிற்கு 33 வீத இட ஒதுக்கீடு செய்யும் மசோதா மத்திய அரசினால் ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

இந்த மசோதாவிற்கு தேசிய ஜனநாயகக் கூட்டணியில் உள்ள சில கட்சிகளும், எதிர்கட்சிகள் சிலவும் ஆதரவு வழங்க மறுத்தமையால் மத்திய அரசு இந்த மசோதாவை தாக்கல் செய்வதை ஒத்தி வைத்துள்ளது. காங்கிரஸ் கட்சி மசோதாவை ஆதரிக்க சம்மதம் தெரிவித்திருந்தது.

ஏற்கனவே 2 முறை இந்த மசோதா நாடாளுமன்றத்தில் ஒத்தி வைக்கப்பட்டமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. (பி-9)

## நெடுமாறன் சொத்துக்களின் விபரம் சேகரிக்கப்படுகின்றது

(புதுடில்லி)

பொடாச் சட்டத்தின் கீழ்க் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப் பட்டுள்ள தமிழர் தேசிய இயக்கத் தலைவர் பழநெடுமாறனின் சொத்துக்கள் தொடர்பான விபரத்தை தமிழக பொலிஸார் சேகரித்து வருகின்றார்கள்.

கர்நாடக நடிகர் ராஜ்குமாரை மீட்பதற்கு தி.மு.க ஆட்சியில் பெருமளவு பணம் கை மாறப்பட்டதாக குற்றம் சாட்டி நக்கீரன் ஆசிரியர் கோபால் பொடாச் சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்டிருக்கின்றார்.

இந்த வழக்கில் பழநெடுமாறனையும் கொளத் தூர்மணி யையும் இணைப்பதற்கு தற்பொழுது முயற்சிகள்மேற்கொள்ளப்பட்டுவருவதாக கூறப்படுகின்றது. (பி-9)

## தீவிரவாதிகளுடனான பேச்சை பிலிப்பைன்ஸ் ரத்துச் செய்தது

(மணிலா)

மொரோ இஸ்லாமிய விடுதலை இயக்கத்தோடு நடத்த இருந்த பேச்சுவார்த்தையை பிலிப்பைன்ஸ் அரசு ரத்துச் செய்துள்ளது.

இந்தப் பேச்சுவார்த்தை எதிர் வரும் வெள்ளிக்கிழமை மலேசியாவில் இடம்பெறுவதாக திட்டமிடப்பட்டிருந்தது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை மிதுனாத் தீவில் நடத்தப்பட்ட தீவிரவாத தாக்குதலின் எதிரொலியாகவே மொரோ இஸ்லாமிய விடுதலை இயக்கத்தோடு நடத்த இருந்த பேச்சுவார்த்தையை பிலிப்பைன்ஸ் அரசு ரத்துச் செய்துள்ளது.

பாதுகாப்புப் படையினரை இலக்கு வைத்து நடத்தப்பட்ட இந்த தாக்குதலில் 30 பொது மக்கள் உயிரிழந்தது இங்கு குறிப்பிடத்தக்கது.

தனி இஸ்லாமிய நாடு கோரிப் போராடி வரும் மொரோ இயக்கத்தினர் அண்மைக்காலமாக பல்வேறு தொடர் தாக்குதலை நடத்தி வருவதும் இங்கு குறிப்பிடத்தக்கது. (பி-9)

# போர், இயற்கை அனர்த்தங்களால் பாதிப்புறுவோர்க்கு உதவ உருவாகிய செஞ்சிலுவை, செம்பிறைச் சங்கங்கள்

**இன்று உலக செஞ்சிலுவை, செம்பிறைச் சங்க தினம்**

1828ஆம் ஆண்டு மே மாதம் 8 ஆம் நாள் சுவிஸ் நாட்டில் பிறந்த ஹென்றி டுனான்ட் (Henry Dunant) என்பவரால் தன்னால் நேரில் பாரத்து அனுபவித்த யுத்த அவலங்களை கருத்தில் கொண்டு யுத்தத்தில் காயப்படுவோரைப் பாதுகாக்கவும், இயற்கை அனர்த் தங்களினால் அல்லற்படுபவர் களுக்கு கைகொடுக்கவும் ஆர்வமுற்று அவரது தனிமனித முயற்சியினால் முதலில் சிறியதொரு குழுவை உரு வாக்கி பணியாற்றத் தொடங்கி னார்.

இதுவே உலகிலே பெருவிருட் சமாக வியாபித்து சேவையாற்றிக் கொண்டிருக்கும் செஞ்சிலுவை, செம்பிறைச் சங்கம் உருவாவதற்கு காரணமாய் இருந்தது. 1859இல் சொல்.ஃ.பரினோ என்ற கிராமத்தில் இத்தாலிக்கும், பிரான்சுக்குமிடை யில் நடந்த யுத்தத்தை நேரில் கண்ணுற்ற இவர் அந்த நேரத்தில் அவ்வேளையில் இருந்தே கடின மாகச் செயற்பட ஆரம்பித்ததன் பலாபலனே இவ்வமைப்பு ஆகும். யுத்தத்தினாலும், இயற்கை அனர்த் தங்களாலும் பாதிப்புறுவோரை காப்பாற்ற வேண்டும் என்ற இவரது கனவு இவ் இயக்கம் ஆரம்பித்ததன் மூலம் நனவாகியது.

''சொல்.ஃ.பரினோவின் அனு பவங்கள்'' என்ற புத்தகத்தின் மூலம தான் கண்ட யுத்த அனுபவங்களை 1862இல் விளக்கி தன்னுடன் மேலும் 4 ஜெனீவா பிரஜைகளையும் இணைத்து ஒரு குழுவாக இயக்கினார். பின்னர் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கமாக பரிணமித்தது 1876ஆம் ஆண்டா கும். தற்சமயம் உபயோகிக்கப்படும் சின்னம் 1864 இல் தெரிவு செய்யப் பட்டது. இச்சின்னம் வெள்ளை நிறப் பின்னணியில் சிவப்பு நிறச் சிலுவை யாகும். அரேபிய நாடு களில் செம் பிறைச் சின்னத்தையும் இணைத்து இயங்க ஏற்றுக் கொள்ளப் பட்டது.

### செஞ்சிலுவை சின்னம் தவறான உபயோகம்

செஞ்சிலுவைச் சின்னத்தைத் தற்போது பல மட்டங்களிலும் பல இடங்களில் பிழையான முறையில் உபயோகிப்பதன் மூலம் பலர் இச்சின்னத்தின் உன்னத தன்மை யினை உணராதவர்களாக இருப் பதைக் காணக்கூடியதாக உள்ளது. செஞ்சிலுவைச் சங்க தலைமையகம் இது விடயமாக தனது அங்கத்துவ நாடுகளோடு தொடர்பு கொண்டு பிழையான முறையில் உபயோகிப் பதை தடுக்கும் நோக்கில் சட்டம் இயற்றி தடுக்குமாறு கேட்டுள்ளது. அங்கத் துவ நாடுகள் ஒத்துழைப்பு வழங்க முன்வந்துள்ளன.

செஞ்சிலுவை இயக்கமானது 3 பிரிவினர்களைக் கொண்டுள்ளது. அவையாவன,

1) தேசிய சங்கம் (National Society)- தேசிய சங்கம் எனப்படு



வது அந்தந்த நாடுகளில் இயங் கும் செஞ்சிலுவைச் சங்கம்- எமது நாட் டில் இலங்கை செஞ்சிலுவைச் சங்கம்.

2) செஞ்சிலுவை, செம்பிறைச் சங்கங் களின் சம்மேளனம். (International Feneration of Red Cross / Crescent- I.F.R.C) ஜெனிவாவில் தாயகமாக இயங்குகின்றது. தேசிய சங்கங்களுக்கு மிகவும் உதவும் கரங்களாக திகழ்கின்றது.

3) சர்வதேச செஞ்சிலுவைச்சங்கம் (Internationl Committee of Red Cross I.C.R.C)-ஜெனிவாவில் தலைமை காரியாலயத்தை கொண்டு இயங்குகிறது .யுத்தம் , அல்லது இயற்கை அனர்த்தம் நடக்கும் நாடுகளில் மனிதாபிமான பணி களில ஈடுபடுவதுடன் தேசிய சங்கங் களுக்கும் உதவுகின்றது.

### அடிப்படைக் கோட்பாடுகள்

செஞ்சிலுவை இயக்கம் 7 அடிப் படைக் கோட்பாடுகளை தன்னகத்தே கொண்டு செயற்படுகிறது. (Seven Fundamental Principles)

1) மனிதாபிமானம்(Humanity)
2) பாரபட்சமின்மை(Impartiality)
3) நடுநிலமை (Neutrality)
4) சுயாதீனம் (Independence)
5) தொண்டர்சேவை (Voluntary Service)
6) ஒருமைப்பாடு(Unity)
7) உலகளாவிய தன்மை (Universality)

செஞ்சிலுவைச் சங்க அங்கத்தவர் களும்,தொண்டர்களும் இந்த 7 அடிப்படைக்கோட்பாடுகளுக்கு கட்டுப் பட்டுசேவை செய்ய வேண் டியவர் களாவர். 'மனிதாபிமான உந்து தல்' என்பது இவ் வமைப்பில் சேவை யாற்றும் அங்கத் தவர்கள், தொண்டர் களுக்கு மட்டும் உரியதல்ல. இவர் களது சேவை மூலம் புதிய அங்கத் தவர் களையும், தொண் டர்களையும் உரு வாக்கி மேலும் மனிதாபிமானச் சேவைகளை முன் னெடுக்க முடிகிறது.

யுத்த காலத்தில் காயமுறுபவர் களின் நலன்களை பேண நான்கு ஜெனிவாசாசனங்கள்(Geneva Conventions) செய்யப்பட்டன. இவற்றால் கீழ்காணும் வகையினர் பாது காக்கப்படுகின்றனர்.

1)களத்தில் காயமுற்ற அல்லது சுகவீனமுற்றவர்கள்.
2)கடலில் காயமுற்ற அல்லது சுகவீனமுற்ற அல்லது தத்தளிக் கும் வீரர்கள்.
3)போர்க் கைதிகள்.
4)ஆயுதப்போரில் சிக்கிய குடிமக்கள்.

ஜெனிவா சாசனங்களில் 176 நாடுகள்அதனை ஏற்று கையொப் பமிட்டுள்ளன.இலங்கையும் அதில் ஒன்றாகும்ஜெனீவா சாசனம் கைச் சாத்தாகி 50வது வருடபூர்த்தியை 12ஆம் திகதி ஆவணி மாதம் 1999ல் அங்கத்துவ நாடு கள் மகிழ்ச்சியுடன் கொண்டாடின.130 ஆயிரம் மில் லியன் அங்கத்தவர்கள் உள்ளனர். தற்சமயம்55 நாடுகளில் சர்வதேச செஞ் சிலு வைக்குழு (I.C.R.C) சிறப்பாக சேவையாற்றி வருகிறது. சர்வதேச செஞ் சிலுவைச் சங்கம் யுத்தம் நடைபெறுகின்ற நாடுகளிலும் ,இயற்கை அனர்த்தங்களினால் பாதிப் புறும் நாடுகளிலும் அந்நாட்டு அழைப்பின் பேரில் மட்டுமே அங்கு சென்று அந்த நாட்டின் சட்டதிட்டங் களுக்கமைவாகவே செயற்பட முடியும்.

### இலங்கையில் சேவை

எமது நாட்டிற்கும் 1989ல் அரசின் அழைப்பை ஏற்று வருகைதந்து சேவையாற்றுகின்றது.

ஒரு நாட்டில் ஒரு தேசிய சங்கமே (One National Society) இயங்க முடியும். ஆனால் தேவைக் கேற்ப கிளைகளை ஸ்தாபித்து இயங்கலாம்.அதற்காக யாப்பு ரீதியாக அங்கீகாரம் அங்கத்தவர்களிடம் பெறப்பட வேண்டும். எமது நாட்டில் சகல மாவட்டங்களிலும் கிளைகள் அமைக்கப்பட்டு இயங்குவதனால் சிறப்பாக சேவையாற்ற முடிகிறது.

குறிப்பாக,யுத்தமேகத்தில் சிக்கி அல்லல்பட்ட மக்களுக்கு தேவை யறிந்து சேவையாற்ற முடிந்தது. யாப்பு ரீதியாக பிரிவுகள் தோறும் செஞ்சிலுவைச்சங்க செயற்பாடு களைச் செய்ய வழிவகுக்கப்பட்டுள ளது. மேலும் கிராம மட்டத்திலேயே செஞ்சிலுவை அமைப்பை தோற்று வித்து செயற்படவும், அங்கத்தவர் களை அதிகமாக இணைக்கவும் பூகோள ரீதியான அலகுகளை ஸ்தாபிக்கவும் யாப்பு அங்கீகாரம் பெறப்பட்டு செயற்பட ஆரம்பிக் கப்பட்டுள்ளது. யாழ். மாவட்டத்தைப பொறுத்தமட்டில் 14 பிரதேச செயலக பிரிவுகள் ரீதியாக செஞ்சிலுவை காரியாலயம் அமைத்து செயறபடுத தப்படுகின்றது.

சர்வதேச செஞ்சிலுவைக்குழு யாழ்.மாவட்டத்தில் ஆற்றும் பணி களில் சில பின்வருமாறு:-

* மோதல் நடைபெறும்பகுதிகளில் வாழும் பொதுமக்கள் மற்றும் காயமடைந்தோர் கைது செய்யப் பட்டோருடன் கௌரவத்தோடு நடந்து கொள்ள வேண்டியது பற்றி போரில் ஈடுபடுபவர்களுக்கு நினை வூட்டி வருதல்.
* கலவரங்கள் தொடர்பான கைது செய்யப்பட்டு,சிறையில் உள்ளோரை பார்வையிட்டு வருகின்றனர். கைதி கள் காணாமல்போதல்,அவர்களுக்கு துன்புறுத்தல்கள் மற்றும் சித்திர வதைகள் இடம்பெறாவண்ணம் தடுக்க இப்பார்வையிடல்கள் உதவு கின்றன.
* மோதல்கள் நடைபெறுகின்ற சுகாதார சீர்கோடுகளைக்கருத்தில் கொண்டு மருத்துவ வசதிகளைச் செய்து கொடுத்தல்.
* இடம்பெயர்ந்த வேளைகளிலும், மீள் குடியேற்றும்போதும் உணவு, குடிநீர் வசதி செய்து கொடுத்தலும், ஏனைய அத்தியாவசிய பொருட்கள் வழங்கலும்.
* போரில் ஈடுபடுவோருக்கு பொது மக்கள் மற்றும் காயமடைந்தோர் கைது செய்யப்பட்டோருடன் கடைப் பிடிக்கவேண்டிய அறிவுரைகளை வழங்குவதுடன் தமது கொள்கை கள் பணிகள் பற்றியும் விளக்குகின் றது.
* தேசிய சங்கம் மூலமாக தமது சில பணிகளை முன்னெடுத்தல்.

தி. உதயசூரியன்
உப தலைவர்
இ.செ. சி. சங்கம் யாழ்.கிளை

### இலங்கை செ.சி. சங்க யாழ்.கிளைப் பணிகள்

இலங்கை செஞ்சிலுவைச் சங்கத் தினர் குறிப்பாக யாழ். கிளை செய்யும பணிகளில் சில பின்வருமாறு:-

1) தேசிய வைபவங்கள்,சமய மற்றும் விளையாட்டு நிகழ்வுகளின் போது முதலுதவி அளித்தலும் அரசாங்க தனியார் செஞ்சிலுவைச் சங்க அங்கத்தவர்கள் மற்றும் பொது மக்கள் ஆகியோருக்கு முதலு தவிப் பயிற்சி அளித்தல் .
2) அனர்த்தங்கள் நடை பெறும் வேளைகளில் உதவுதல்.
3) நிவாரண உதவிகள் வழங்குதல்.
4) கடிதச்சேவை, காணமல்போனோரை த்தேடுதல்.
5) அம்புலன்ஸ்சேவை.
6) இரத்ததான நடவடிக்கை.
7) சுகாதார சேவை.
8) சிரமதானப் பணிகள்.
9) சுயதொழில் முயற்சிகள்.
10) ஆரம்ப சுகாதார சேவை.

சேவை மனப்பான்மையுள்ள எவரும் இச்சங்கத்தில் அங்கத் தவராக இணைந்து கொள்ள முடியும.

மீளக்குடியேறிவரும் மக்களுக்கு பல்வேறு மறுவாழ்வளிக்கும் உதவி கள் தேவைப்படுகின்றன. செஞ் சிலுவை இயக்கத்தின் தொண்டர் சேவை மூலம் மனிதாபிமான பணி களில் ஈடுபட்டு மன சாந்தியும், சமாதா னமும் அடைவோமாக. □

---

**பொ.ஐ.மு–ஜே.வி.பி.கூட்டு நியாயமானால்**

# விடுதலைப்புலிகளுடன் இணைந்து நாம் போராடுவதில் தவறென்ன இருக்கிறது?

**கலாநிதி விக்கிரமபாகு கருணாரட்ன வினா**

(கொழும்பு)

இலங்கை போர் நிறுத்த கண் காணிப்புக்குழு தனக்குரிய பணி களை முறையாக மேற்கொள்ளாது அமெரிக்காவின் உலகமயமாக் கல் கொள்கையை விரிவுபடுத்த வும முதலாளத்துவத்தை நிலைநாட்ட வுமே முனைந்து வருகிறது.

இவ்வாறு புதிய இடதுசாரி முன்னணித் தலைவர் கலாநிதி விக்கிரமபாகு கருணாரட்ன குற் றம் சாட்டியுள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் கருத்து வெளியிடுகையில்,

இராணுவத்திற்கு தகவல் வழங்குவோர் பலர் தொடர்ச்சியாக கொல்லப்பட்டு வருகிறார்கள். இதனை யுத்தநிறுத்த மீறலாக கருத முடியாது.

ஏனெனில் யுத்தம் நிறுத்தப்பட்ட பின்னர் நாட்டில் தினமும் கொலை கள் இடம்பெற்று வருகின்றன.

இதனை தடுத்து நிறுத்த பாது காப்பு பிரிவும் நடவடிக்கை எதை யும் மேற்கொள்ளவில்லை.

மேலும், வாஷிங்டன் மாநாட் டிற்கு புலிகளுக்கு அழைப்பு விடுக் காத அமெரிக்கா ஜப்பானில் நடை பெறவுள்ள உதவி வழங்கும் மாநாட் டில் கலந்து கொள்ளுமாறு விடுதலைப் புலிகளை வற்புறுத்துவது நியாய மானதாக எமக்கு தெரியவில்லை.

வடுதலைப்புலிகள் சிறந்த பொரு ளாதார கொள்கையை கடைப்பிடித் தால் அவர்கள் மீதான தடையை நீக்குவோம் என முன்பு கூறிவந்த அமெரிக்கா, அவர்கள் திறந்த பொருளாதார கொள்கையை கடைப் பிடித்த பின்னரும் தடையை நீக் காமல் இருப்பது ஏன்?

எனவே, வெளிநாட்டுப் பிரதிநிதி களால் எமக்கோ எமது நாட்டிற்கோ எந்தப்பலனும் இல்லை.அவர்கள் நாட்டின் வளங்களைச் சூறையா டுவதற்காகவே இங்கு வந்துள்ளார் கள்.

அண்மையில் மூதூரில் இடம் பெற்ற வன்முறைச் சம்பவத்துடன் விடு தலைப்புலிகளுக்கு தொடர்பு உண்டு என்றெல்லாம் குற்றச்சாட்டுக்கள் எழுந்திருக்கின்ற நிலையில் அச் சம்பவத்தை தடுத்து நிறுத்த முடி யாத ஸ்ரீலங்கா அரசும் ,கண்காணிப் புக்குழுவும் புலிகள் தான் இதனைச் செய்தார்கள் என்பதற்கான ஆதாரத் தினை காட்டுவார்களா?

அதேசமயம்,இனவாத சக்தி களாக விளங்கும் பொதுஜன ஐக் கிய முன்னணியும்,ஜே.வி.பியும் கூட்டுச் சேர்ந்து கூட்டணி ஒன்றை அமைக்க முயற்சிக்கும் பட்சத்தில் நாமும் வடுதலைப்புலிகளுடன் இணைந்து போராடுவதில் என்ன தவறு?என்று கேள்விகளை எழுப்பியுள்ளார். (உ-10)

---

# வாக்காளர் பட்டியலைப் பெறுவதில் பெருமிடர்

(தென்மராட்சி)

யாழ்.மாவட்ட தேர்தல் திணைக் களத்தில் வாக்காளர் பட்டியலைப் பெறுவதில் மக்கள் பெரும் கஷ்டங் களை எதிர்நோக்கிவருவதாக தெரிய வருகிறது.

அத்தாட்சிப்படுத்தப்பட்ட வாக்காளர் பட்டியல் ஒன்றைத் தேர்தல்திணைக களத்திடம் இருந்து பெறுவதற்கு நாற் பது ரூபா பணம் வாக்காளரிடம் இருந்து பெறப்படுகின்றபோதும்,

திணைக்களத்தில் இருக்கும் வாக்காளர் பதிவுப் புத்தகத்தில் தமது பதிவுகள பற்றிய விபரங்களை வாக்கா ளர் பட்டியலுக்கு விண்ணப்பிப்பவரே தேடிக் கண்டு பிடிக்க வேண்டியுள் ளது.

இதன்காரணமாக படிப்பறிவில்லா தவர்களும், சுகயீன முற்றவர்களும், கண்பார்வைக் குறைவானவர்களும் தமது பதிவுகளை குறித்த வாக்காளர் பதிவுப்புத்தகத்தில் தேடிக் கண்டுபிடிப் பதில் பெரும் சிரமங்களை எதிர் நோக்கி வருகின்றனர்.

வீடுகள் சேதமடைந்தமைக்கு நஷ்ட ஈட்டுக்கு விண்ணப்பம் செய்வதற்கு வாக்காளர் பதிவு அத்தாடசிப் பத்திரம் மிகவும் முக்கியமான ஆவணமாகக் கோரப்பட்டுள்ளமை குறிப்பிடதத்க்கது. (உ-77)

---

## திரைப்பட கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக புற நிலைப்படிப்புகள் அலகு ஒழுங்கு செய்துள்ள திரைப்படக் கருத்தரங் கின் தொடர் 2 எதிர்வரும் 10ஆம் திகதி சனிக்கிழமை பி.ப 4 மணிக்கு, ஜும்மா பள்ளிவாசல் ஒழுங்கையில் அமைந்துள்ள யாழ்ப்பாண பல்கலைக் கழக சிற்றி ஹோலில் நடை பெறவுள்ளது.

நிகழ்வில் எழுத்தாளர் க. சட்ட நாதன், 'வித்தியாசமான தமிழ் திரைப்படங்கள்' என்ற தலைப்பில் உரையாற்றவுள்ளார். தொடர்ந்து கலந்துரையாடல் நடைபெறவுள் ளது.

இக்கருத்தரங்கில் ஆர்வலர்கள் எவரும் கலந்து கொண்டு பயன் பெற முடியும் என புறநிலைப் படிப்புகள் அலகின் இணைப்பாளர் அறிவித்துள்ளார். (உ)

## வீடியோ படக்காட்சி

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக புற நிலைப் படிப்புகள் அலகின் ஏற்பாட்டில் ஞாயிறு தோறும் தொடராக இடம் பெற்று வரும் வீடியோ படக்காட்சி தொடரில் இவ்வாரம் புவியியற் துறை மண்டபத்தில் நிக்கலஸ் குளோயிட்ஸ் இயக்கிய 'பெங்கோலி நைற்' (The Bengoli night) எனும் ஆங்கிலத் திரைப்படம் காண் பிக்கப்படவுள்ளது.

திரைப்படக்காட்சியின் இறுதியில் எழுத்தாளர் சு. யேசுராசா தலைமை யில் படம் பற்றிய கலந்துரையாடல் இடம்பெறும். இந் நிகழ்வில் ஆர்வலர்கள் எவரும் கலந்து பயன் பெறமுடியும் என புற நிலைப்படிப் புகள் அலகின் இணைப்பாளர் அறிவித்துள்ளார். (உ)

# பரஸ்பரம் புரிந்துணர்வின்மையே பேச்சுக்கள் தாமதமடையக் காரணம்

## நோர்வே நாட்டு விசேட தூதுவர் எரிக்சொல்ஹெய்ம் எடுத்துரைப்பு

(கொழும்பு)

**யுத்த நிறுத்த கால அவகாசத்தை பயன்படுத்தி விடுதலைப்புலிகள் தமது நிலைகளை உறுதிப்படுத்தி வருகின்றனர் என சிங்கள மக்கள் கருதுவதாலும் அதே போன்று யுத்த நிறுத்தத்தைச் சாதகமாகப் பயன்படுத்தி ஸ்ரீலங்கா இராணுவத்தினர் தமது படைகளை பலப்படுத்தி பாதுகாப்பை உறுதிப் படுத்துவதாக விடுதலைப் புலிகள் நினைத்துக் கொள்வதாலுமேயே பேச்சுவார்த்தை காலதாமதமாகிக் கொண்டு செல்கிறது.**

**இவ்வாறான வீண் சந்தேகங்கள் இருதரப்பினரிடையேயும் தொடர்ந்து வருமாயின் நோர்வேயின் வேலைகளும் மிகவும் கடினமடைந்து விடும் என நோர்வே நாட்டு விசேட தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் தெரிவித்துள்ளாா.**

இலங்கை ஊடகவியலாளர்களின் சங்கத்தினால் ஒழுங்கு செய்யப்பட்ட இராப் போசன விருந்தொன்றில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் தொடர்ந்தும் கருத்துக் கூறுகையில்,

சிங்கள மக்களையும் விடுதலைப் புலிகளையும் ஒருவரையொருவர் புரிந்து கொள்ளச் செய்வதே ஆரம்பத்தில் இருந்த சவாலாகும்.

இத்தகைய சவாலை ஏற்றுக் கொண்ட ஸ்ரீலங்காவின் தற்போதைய அரசு ஆட்சிப்பீட மேறியதும் யுத்தத்தை நிறுத்தி புரிந்துணர்வை ஏற்படுத்தி பேச்சிற்கு புலிகளை அழைத்தது.


அதனையடுத்து பேச்சுவார்த்தைகளும் வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்ற நிலையில் தவிர்க்க முடியாத காரணத்தினால் புலிகள் பேச்சில் இருந்து விலக நேரிட்டது.

இந்நிலையில் இதனைச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்ட தீவிரப் போக்குள்ள சில தீய சக்திகள் சமாதானப் பேச்சிற்கும் அதன் நடவடிக்கைகளுக்கும் ஊறு விளைவிக்க முயன்று வருகின்றனர்.

அத்துடன், தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் பிரதமரிற்கு அனுப்பியுள்ள கடிதத்தில் முக்கிய பிரச்சினைகள் தீர்த்து வைக்கப்படுவதில் காணப்படும் தாமதத்தினாலேயே தாம் பேச்சில் இருந்து ஒதுங்கியுள்ளதாக குறிப்பிடப் பட்டிருந்தது.

எனவே, இலங்கை அரசு நல்ல நோக்குடன் செயற்பட்டு வந்தாலும் இத்தகைய பிரச்சினைகளுக்கு துரிதமாக தீர்வு கண்டு தாமதங்கள் எதுவுமின்றி தனது அபிவிருத்திப் பணிகளைத் தொடர வேண்டும்.

ஏனெனில் இராணுவ அமைப்பொன்றில் இருந்து அரசியல் அமைப்பாக மாறிவரும் விடுதலைப் புலிகள் இத்தகைய தாமதங்கள் ஏற்படுவதை விரும்பவில்லை. விடுதலைப் புலிகளை மீண்டும் பேச்சுவார்த்தையில் கலந்து கொள்ள



வைக்க முடியும் என்றும் குறிப்பிட்டிருந்தார்.

அத்துடன், எதிர்வரும் யூன் மாதத்தில் நடைபெறும் டோக்கியோ மாநாட்டில் புலிகள் கலந்து கொள்வது அவர்களுக்கு மிகவும் நன்மை பயக்கும் எனவும் கூறினார். (உ-10)

## உலக செஞ்சிலுவைத் தினக் கொண்டாட்டம்

(யாழ்ப்பாணம்)

உலக செஞ்சிலுவைத் தினம் இன்று வியாழக்கிழமை பி.ப 2.30 மணிக்கு இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க யாழ். கிளையில் கொண்டாடப்படவுள்ளது.

யாழ். கிளைத் தலைவர் வைத்திய கலாநிதி வை.தியாகராஜா தலைமையில் நடைபெறும் இந் நிகழ்வில்,

பிரதம விருந்தினராக ஓய்வு பெற்ற மாவட்ட நீதிபதி மு.திருநாவுக்கரசுவும், சிறப்பு விருந்தினர்களாக யாழ். செயலக திட்டப்பணிப் பாளர் பு.சுந்தரம்பிள்ளை, சர்வதேச செஞ்சிலுவைச் சங்க யாழ். வதிவிடப்பிரதிநிதி பீற்றர் ஆகியோரும், அதிதிப் பேச்சாளராக வலிகாமம் மேற்கு செஞ்சிலுவைச் சங்க பிரிவுத் தலைவர் நா.குகராசாவும், கலந்து கொள்ளவுள்ளனர்.

இதேவேளை, உலக செஞ்சிலுவைத் தினத்தை முன்னிட்டு தென்மராட்சிப் பிரிவில் நடமாடும் வைத்திய சேவையும், முன்பள்ளி விளையாட்டு நிகழ்வுகளும் ஏனைய பிரிவுகளில் பல்வேறு சிரமதானப் பணிகளும், வீதி ஒழுங்கு விதிகள் சம்பந்தமான கருத்தரங்குகளும் பாடசாலைகளில் செஞ்சிலுவை இயக்கத்தின் செயற்பாடுகள் பற்றிய கொள்கை பரப்பல் நிகழ்வுகளும் நடைபெற்று வருகின்றது.

நாளை பிப 1.30 மணிக்கு இலங்கை செஞ்சிலுவைச் சங்க மற்றும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்க உறுப்பினர்கள், தொண்டர்கள், ஊழியர்களுக்கான செஞ்சிலுவை அமைப்பு பற்றிய வினாக்கொத்து ஒன்றிற்கு விடையளிக்கும் நிகழ்வு இ.செ.ச. கிளையில் நடைபெற்று, நிகழ்வின் இறுதியில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசில்கள் வழங்கப் படவுள்ளன. (உ)

## படைமுகாம்களில் இருந்து கேட்கும் வேட்டுச் சத்தங்களால் மக்கள் பயப்பீதி

(யாழ்ப்பாணம்)

குருநகர் கடற்கரையோர இராணுவ முகாம்களில் தொடர்ந்து நடைபெற்று வரும் பயிற்சி நடவடிக்கைகளால் மக்கள் பெரும் பீதியடைந்துள்ளனர்.

குருநகர்ப் பகுதியில் மக்களின் குடியிருப்புக்களை அண்மித்த படைமுகாம்களில் அண்மைக் காலமாக படையினரின் சூட்டுப் பயிற்சி மற்றும் உடற்பயிற்சி போன்றவற்றில் படையினர் ஈடுபட்டு வருகின்றனர்.

அத்துடன், காவலரண்களை பலப்படுத்தும் நடவடிக்கைகளும் முனைப்பாக இடம்பெறுகின்றன.

இரவு நேரங்களில் திடீர் திடீரென சூட்டுச் சத்தங்கள் கேட்பதால் மக்கள் பெரிதும் பரபரப்புக்கு ஆளாவதாகவும் சுட்டிக்காட்டப்படுகின்றது.

இதேவேளை, தற்போதைய சமாதானச் சூழ்நிலையில் இப்படியான படையினரின் நடவடிக் கைகள சமாதானத்தின் பால் மக்களுக்கு ஐயத்தை ஏற்படுத்துவ தாக சமாதான ஆர்வலர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

இது இவ்விதமிருக்க கோட்டைப் பகுதியில் பாரிய படைமுகாம் அமைப்பு முயற்சிகள் இடம்பெற்று வருவது குறிப்பிடத்தக்கது. (உ-4)

## திலீபன் மருத்துவமனைக்கு நிரந்தரக் கட்டடம்

(மருதங்கேணி)

மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பிரிவில் மீளக் குடியமர்ந்த மக்களுக்கு பெரும் சேவையாற்றி வரும் தியாகி திலீபன் மருத்துவமனைக்கு நிரந்தரக் கட்டடம் அமைப்பதற்கான காணி தெரிவு செய்யப்பட்டு மீளக் குடியமர்ந்த மக்களால் சிரமதானம் மூலம் துப்புரவு செய்யப்பட்டுள்ளது.

இக்கட்டட அமைப்பு மிக விரைவாக ஆரம்பிக்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதேநேரத்தில் மருதங்கேணி கிராமிய வைத்தியசாலையில் கிழமையில் இரண்டு நாட்கள் நடமாடும் வைத்தியசேவையை இப் பகுதியில் நடாத்தி வருகிறது.

''நிக்கொட்'' நிறுவனத்தின் உதவியுடன் இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் நடமாடும் வைத்திய சேவையை இங்கு ஆரம்பிக்கவுள்ளதாக செயலக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (உ-35)

## பயிற்சி

(கல்வயல்)

தென்மராட்சி பிரதேச செயலகத்தினரால் மேற்படி பிரிவில் உள்ள இளைஞர்-யுவதிகளுக்கான கணனி, மின்சாரம், கட்டடத் தொழிற்றுறை, இயந்திரவியல் பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன. (உ-36)

## வைகாசிப் பொங்கல்

(பருத்தித்துறை)

தென்புலோலி மந்திகை கண்ணகை அம்பாள் ஆலய வைகாசிப் பொங்கல் விழா எதிர்வரும் 17 ஆம் திகதி சனிக்கிழமை நடைபெறவுள்ளது.

இதேவேளை கண்ணகை அம்மன் படிப்பு நாளை ஆரம்பமாக உள்ளது. (உ-52)

## எழுச்சி நிகழ்வுகள்

(வல்வெட்டித்துறை)

இரண்டாவது உலக இந்து மகாநாட்டை முன்னிட்டு இந்து மதக் குருமார் ஒன்றியத் தலைவரும், வல்வை வைத்தீஸ்வரன் தேவஸ்தான பிரதம குருவுமான ''பிரம்மஸ்ரீ ப.மனோகரக்குருக்கள்'' தலைமையில் இந்து மறுமலர்ச்சி ஆதீனம், குருமார் அர்ச்சகர் மகா சபை,ஜெயகிருஷ்ண குருகுலம், ஜெயவித்தியா அறநெறிப் பாடசாலை , இந்து ஆசிரியர் முன்னணி மற்றும் இந்து தமிழர் மறுமலர்ச்சிக் கூட்டணி போன்ற இந்து அமைப்புகள் இணைந்து நடத்தும் விசேட இந்து சமய எழுச்சி நிகழ்வுகள் வடமராட்சிப் பகுதி ஆலயங்களில் சிறப்பாக நடைபெற்று வருகின்றன. (உ-63)


## தரம் 09 மாணவர்களுக்கான கட்டுரைப் போட்டி

பரிசுகள் ரூபா 750/= 500/= 250/=
மற்றும் சான்றிதழ்களும்

விடயம் : ''தாய் அன்பிற்கு நிகரேது''

சொற்கள்: 175-200 வரை

கட்டுரைகள் 25.05.2003 ற்கு முன்னதாக ''மாணவர் கட்டுரைப் போட்டி'' வலம்புரி, 15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு பின்வரும் பத்திரத்தையும் நிரப்பி இணைத்து அனுப்பவும்.

இணைக்கும் பத்திரம்

கட்டுரைப் போட்டி இல-3

மாணவர் முழுப் பெயர் :------------------------------
பாடசாலை :------------------------------
:------------------------------
கற்கும் தரம் :--------------

உறுதிப்படுத்துகிறேன்

--------------------
ஆசிரியர்


## இராணுவத்துடன் செயற்பட்ட ராசிக்குழு உறுப்பினர் மீது கைக்குண்டுத் தாக்குதல்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு புதூரில் கடந்த திங்களன்று இரவு இடம்பெற்ற கைக்குண்டு வீச்சுத் தாக்குதலில் இராணுவ வீரர் ஒருவர் காயமடைந்து மட்டக்களப்பு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

விமானப்படைத்தளம், இராணுவம், பொலிஸ் மற்றும் விமானப்படை நிலைகள் உள்ள பாதுகாப்பு வலயப் பிரதேசத்தில் இச்சம்பவம் இடம் பெற்றுள்ளது.

இச்சம்பவத்தில் ஆர்.ரமேஸ் குமார் என்ற இராணுவ வீரரே காயமடைந்தவராவார்.

இவர் ஈ.பி.ஆர்.எல்.எவ் இராசிக் குழுவூடாக தேசிய துணைப்படையில் இணைந்து தற்பொழுது வவுணதீவு இராணுவ முகாமில் பணியாற்றி வருவதாகத் தெரிவிக்கப் படுகின்றது.

சம்பவ தினத்தன்று விடுமுறையில் தனது வீட்டிற்கு வந்த இவர், உணவு உட்கொண்டிருந்த வேளை வீட்டைச் சுற்றி சந்தேகத்திற்கிடமான முறையில் இருவர் மோட்டார் சைக்கிளில் திரிந்ததாகவும், இதனையடுத்து இந்த இராணுவ வீரர் வெளியே வந்து பார்த்த போது கைக்குண்டை வீசிவிட்டு இருவரும் தப்பிச் சென்றதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (உ-5)

## பிரதமரின் செயல் குறித்து ஜனாதிபதி சந்திரிகா ஏளனம்

(கொழும்பு)

இராணுவப் புலனாய்வுத்துறையினால் கொலை செய்யப்படுவது தொடர்பாக ஆராய்வதற்குப் பிரதமரால் குழுவொன்று நியமிக்கப் பட்டுள்ளமையானது''குதிரையை தப்பிச செல்லவிட்டு லயத்தை மூடிவிடும் கதையை ஞாபகமூட்டுவதாக உள்ளது'' என்று ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா பிரதமருக்கு எழுதியுள்ள கடிதத்தில் ஏளனம் செய்துள்ளார்.

இது தொடர்பில் ஜனாதிபதி செயலகம் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

இராணுவப் புலனாய்வுப் பிரிவினரால் சுட்டுக் கொல்லப்படுவது தொடர்பாக பிரதமருக்கு ஜனாதிபதி விரிவான கடிதமொன்றை அனுப்பி வைத்துள்ளார்.

இராணுவப் புலானாய்வுப் பிரிவினர் கொல்லப்படுவது தொடர்பாக ஆராய்வதற்கு குழுவொன்றை நியமிப்பதற்குப் பதிலாக அத்துருகிரிய சம்பவம் தொடர்பாக ஆராய்வதற்கு நியமிக்கப்பட்ட ஆணைக் குழுவின்நடவடிக்கைகளை வெற்றிகரமாக மேற்கொள்வதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுப்பதே சிறந்தது.

அத்துருகிரிய பிரதேசத்தில் இயங்கிய விசேட பாதுகாப்பு பிரிவைச் சேர்ந்த அதிகாரிகள் குறித்த வீட்டை சுற்றி வளைத்த சம்பவத்தை அடுத்தே இராணுவப் புலனாய்வுத் துறை அதிகாரிகள் கொலை செய்யப்படுகின்றனர்.

இச்சம்பவத்தையடுத்து அதிகாரிகளின் பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டிய தேவையைத்தான் வலியுறுத்தி வந்ததாக ஜனாதிபதி அந்தக் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

அனைத்துச் சம்பவங்களும் நடந்து முடிந்த பின் குழு நியமிப்பது மக்களைத் தவறாக வழிநடத்த முற்படும் செயல் என்றும் ஜனாதிபதி சுட்டிக்காட்டியிருப்பதாக ஜனாதிபதி செயலகம் தெரிவித்துள்ளது. (வ)

# வசமாக மாட்டிக் கொண்ட விசித்திரத் திருடன்

(யாழ்ப்பாணம்)

அதிகாலை வேளையில் மோட்டார் சைக்கிளில் வந்துகொண்டிருந்த ஒருவரை எதிர்ப் புறமாக சைக்கிளில் வந்த ஒருவன் தள்ளிவீழ்த்தி விட்டு அவரது பணப்பையைத் திருடிக் கொண்டு ஓடுகையில் பொதுமகன் ஒருவரிடம் சிக்கி நன்றாக வாங்கிக் கட்டிக்கொண்ட சம்பவமொன்று நேற்று கொக்குவிலில் இடம்பெற்றது.

இச்சம்பவம் பற்றித் தெரியவருவதாவது,

நேற்று அதிகாலை 5.30 மணியளவில் அவசர வேலையாக முதிய வயதினர் ஒருவர் மோட்டார் சைக்கிளில் கே.கே.எஸ். வீதி வழியாக யாழ்ப்பாணம் நோக்கி வந்துகொண்டிருந்தார். கொக்குவில் சந்திக்கும் குளப்பிட்டிச் சந்திக்கும் இடையில் ஓர் இடத்தில் மிதிவண்டியில் வந்த ஒருவன் அவரை எதிர்கொண்டு தள்ளி வீழ்த்திவிட்டு அவரது பணப்பையை பறித்துக் கொண்டு ஓடத் தொடங்கினான்.

அவ்வேளை மோட்டார்சைக்கிளில் அவ்வழியாக வந்த இளைஞர் ஒருவர் முதியவரின் கூக்குரலைக் கேட்டுத் திரும்பி திருடனைத் துரத்திச் சென்று பிடித்தார். பிடிபடுமுன் கற்களைக் கொண்டு திருடன் தாக்க முயன்றதினால் வகையாக வாங்கிக் கட்டிக் கொண்டு திருடிய பணப்பையைத் திருப்பிக் கொடுத்து விட்டான்.

அதிகாலையில் பணப்பையை இழந்து தவித்த முதியவர் மீண்டும் பணப்பையுடன் மகிழ்ச்சியோடு புறப்பட்டுச் செல்ல பணப்பையைத் திருடிய வெற்றி மகிழ்ச்சியில் ஓடிய திருடன் இளைஞரின் முயற்சியால் திருடியதைத் திருப்பிக் கொடுத்துவிட்டு மூக்குடைபட்டு இரத்தம் ஒழுகியபடி இருப்பிடம் சென்றதாகத் தெரிகின்றது.

திருடனைத் துணிச்சலுடன் துரத்திச் சென்று பணப்பையைப் பெற்று முதியவரிடம் கொடுத்த இளைஞனைப் பலரும் பாராட்டினார்கள். (பி)

# இலங்கையில் முதலீட மலேசியா ஆர்வம்

(கொழும்பு)

இலங்கையில் முதலீடு செய்ய மலேசிய அரசாங்கம் விரும்பியுள்ளதாக மலேசிய முதலமைச்சர் ஜனாஸ்ரூட் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, முதலீடு தொடர்பாக ஆராய்வதற்கு இவர் மிக விரைவில் இலங்கை வரவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்ட பின்னர் சர்வதேச நாடுகளும், அந்நாடுகளின் தனியார் நிறுவனங்களும் இலங்கையின் பல்வேறு துறைகளில் முதலீடுகளை செய்ய முன்வந்திருப்பது தெரிந்ததே. (தி)

இரண்டாவது உலக இந்து மகாநாடு தொடர்பாக...

## உரத்த சிந்தனை

## ஓலமிடும் ஒலி பெருக்கிகள்

மருத்துவக்கல்வி கற்பதற்கு யாழ்ப்பாணப்பல்கலைக்கழகத்துக்கு தெரிவு செய்யப்பட்டு தங்குவதற்கு விடுதி தேடிக்கொண்டிருந்த சில மாணவர்களுக்கு அறிவும் அனுபவமும் மிக்க சிலரால் வழங்கப்பட்ட உபதேசம் இது.

'எவ்வளவு வசதியுள்ள விடுதியாய் இருந்தாலும் இந்து ஆலயத்துக்குப் பக்கத்தில் இடம் எடுக்கவேண்டாம்'

'கோயில் இல்லாத ஊரில் குடியிருக்கவேண்டாம்', கோபுர தரிசனம் கோடிபுண்ணியம், ஆலயம் தொழுவது சாலவும் நன்று என்றெல்லாம் நமது முன்னோர்கள் சொல்லி வைத்திருக்கையில் இவ்வாறான பொன்மொழி தோன்றக்காரணமென்ன?

இவ்வாறு உபதேசித்தவர்கள் வேற்று மதத்தவர்களா? அல்லது நாஸ்திகர்களா? இல்லை! இல்லை! அவர்கள் உண்மையான இந்துக்கள்.

இன்று நமது ஆலயங்கள் அமைதிபேணும் வழிபாட்டுத்தலங்களாக இல்லாமல் ஒலிபரப்பு நிலையங்களாக மாறிவிட்டபடியால் தான் இப்படியான ஒரு அறிவுரை தோன்றியது. இந்துக் கோயில்களில் எந்தக்காலமும் விழாக்கள் இருக்கும். விழா ஒன்று பூரணம்பெற வேண்டுமானால் ஒலிபெருக்கிகள் ஓலமிடவேண்டும். இது இன்றைய நியதி. எனவே மருத்துவக்கல்வி கற்கும் மாணவன் ஒருவன் அருகிலிருந்து மனம் ஒருமித்து படிக்கமுடியுமா? எனவே அந்த அறிவுரை நியாமானதல்லவா?

இந்த விடயத்தில் பத்திரிகைகளில் பலரும் பல தடவைகள் எழுதி எழுதி அலுத்துவிட்டார்கள். பண்பாட்டைக் காக்கும் வலிமை மிக்க இளைஞர்கள் தான் இவ்விடயத்தில் கவனம் எடுக்கவேண்டும். துன்பங்களை போக்கி மன அமைதியைத்தேட ஆலயம் சென்றால் அங்கு ஓலமிடும் ஒலிபெருக்கிகள் இன்னும் தலைவலியை அதிகரிக்கின்றன.

வழிபாட்டின்போது திருமுறை ஓதுங்கள் என்பது முன்னோர் அறிவுரை. அவ்வாறு திருமுறை ஓத முற்பட்டால் எமது குரல் எமக்கே கேட்கவிடாமல்- அடுத்தவசனம் என்பது நினைவுக்குவரவிடாமல் ஒலிபெருக்கியில் ஒலிக்கும் பக்திப்பாடல்கள் குழப்புகின்றன.

ஒலிபெருக்கியின் தேவையும் ஆலயங்களில் உண்டு என்பதை யாரும் மறுக்கவில்லை. ஆனால் அதிகாலை நான்கு மணியிலிருந்து இரவு 10 மணி வரை ஒலிபெருக்கிதான் உற்சவம் நடத்தவேண்டுமா? ஒலி பெருக்கி பயன்படுத்தும் நேரங்கள் மட்டுப்படுத்தப்படவேண்டும்.

அதேபோல ஒலிபெருக்கியின் ஓசையும் மட்டுப்படுத்தப்படவேண்டும். ஆலய வளாகத்தில் மட்டும் அந்த ஓசை ஒலிக்குமானால் அதில் தவறில்லை.

'வாழு, வாழவிடு' என்ற உயர்தத்துவம் உண்மையான இந்துவின் உள்ளத்தில் என்றும் அடிநாதமாக இருக்கவேண்டும். பிறருக்கு இடைஞ்சல் செய்பவன் உண்மைச் சமயி ஆகான்

ஆலயங்களுக்குமட்டும் இந்தக் கருத்து உரியதல்ல. வைபவங்கள் எதுவாக இருந்தாலும் ஒலிபெருக்கியை நாம் பயன்படுத்தும்போது இதைக்கவனத்தில் கொண்டால் எவ்வளவு நல்லது!

முன்பு ஒரு இந்துமாநாட்டிலே இந்த விடயம் தீர்மானமாக எடுக்கப்பட்டது. ஆனால் கைக்கொள்ளப்படவில்லை.இந்த இரண்டாம் உலக இந்துமாநாட்டின்போது இந்துக்கள் அனைவரும் சேர்ந்து தமது உள்ளத்தில் இந்த உறுதி உரையை எடுப்போமாக. ஒலிபெருக்கிகள் மூலம் பிறருக்கு இடைஞ்சல் செய்வதை இந்து சமய விழாக்களில் இனிமேல் தவிர்த்துக்கொள்வோம். ஆலயங்களுக்கு அருகில் இருந்தால் அமைதியாகவாழலாம் என்ற நம்பிக்கை எமது மக்களிடையே வளரவகை செய்வோம். முக்கியமாக ஆலய பரிபாலன சபைகள், ஆலய நிர்வாகிகள் உள்ளங்களில் இந்த உரத்த சிந்தனை வலுப்பெறட்டும்.

ப.சிவானந்த சர்மா B.A (Hons) (கோப்பாய் சிவம்)
நிர்வாக உத்தியோகத்தர்- வேதசிவாகம குரு குல கலாசாலை

## சங்காபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

திருநெல்வேலி ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலய சங்காபிஷேகம் எதிர்வரும் 11ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை இடம்பெறவுள்ளது.

அன்று மாலை அம்பாளின் பூந்தண்டிகை வீதியுலாவும் இடம்பெறவுள்ளது. (உ)

## தாச்சிப்போட்டி

(யாழ்ப்பாணம்)

உடுவில் கிழக்கு அண்ணா விளையாட்டுக் கழகம் யாழ். மாவட்ட தாச்சிச் சங்கத்தின் அனுசரணையுடன் நடாத்திவரும் மாபெரும் தாச்சிச் சுற்றுப் போட்டியின் 4வது சுற்றில் இன்று பி.ப. 4.45 மணிக்கு சங்குவேலி ஐக்கிய விளையாட்டுக் கழகமும் கோண்டாவில் மறுமலர்ச்சி விளையாட்டுக் கழகமும் பங்குபற்றவுள்ளன. (உ-10)

## இந்து மாணவர் எழுச்சி விழா

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட இந்து இளைஞர் பேரவை மாணவர் மன்றத்தினால் இன்று பி.ப. 3 மணிக்கு இரண்டாம் உலக இந்து மாநாட்டையொட்டி "இந்து மாணவர் எழுச்சி விழா" நல்லை ஆதீனத்தில் நடத்தப்படவுள்ளது.

இந்து மாணவர்கள் அனைவரையும் இந்நிகழ்வில் கலந்து சிறப்பிக்குமாறு விழா ஏற்பாட்டுக் குழுவினர் கேட்டுள்ளனர். (உ-10)

## பிரதமரின் உரை மீதான விவாதம் இன்று

(கொழும்பு)

இலங்கையின் தற்போதைய அரசியல் நிலை தொடர்பாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நேற்று முன்தினம் நிகழ்த்திய உரை தொடர்பான விவாதம் இன்று வியாழக்கிழமை பாராளுமன்றத்தில் நடைபெறவுள்ளது.

இவ்விவாதம் மு.ப. 10 மணிமுதல் மாலை 6.30 மணிவரை இடம்பெறும் என சபாநாயகர் அறிவித்துள்ளார். (வ)

## சங்கரி கொழும்பில்

(கொழும்பு)

தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவரும் யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான வீ.ஆனந்தசங்கரி தனது தனிப்பட்ட வெளிநாட்டு விஜயத்தை முடித்துக் கொண்டு நேற்று முன்தினம் நாடு திரும்பியுள்ளார்.

இவர் தற்போது கொழும்பில் தங்கியுள்ளார். (வ)

## கைத்தொலைபேசிக் கடத்தல் முறியடிப்பு

(கொழும்பு)

சட்டவிரோதமாக இலங்கைக்குள் கடத்திவரப்படவிருந்த 50 இலட்சம் ரூபா பெறுமதியான ஆயிரம் கையடக்கத் தொலைபேசிகளை கட்டுநாயக்கா விமான நிலைய சுங்க அதிகாரிகள் கைப்பற்றியுள்ளனர்.

சிங்கப்பூரிலிருந்து இத்தொலைபேசிகள் கடத்திவரப்பட்டதாகவும் தற்போது இவை அனைத்தும் அரசுடமையாக்கப்பட்டுள்ளதாகவும் உதவிச் சுங்க அத்தியட்சகர் கே.ஏ.தர்மசேன தெரிவித்துள்ளார். (தி)

## ம.உ.ஆ.குழுவின் முயற்சி பலிதம்

(திருநெல்வேலி)

கடந்த 1996ஆம் ஆண்டு வன்னிப் பகுதியிலிருந்து யாழ். குடாநாட்டுக்கு பொது மக்களை ஏற்றிவந்த போது கடற்படையினரால் கைப்பற்றப்பட்ட மீன்பிடிப்படகை மீட்டுத் தருமாறு வல்வெட்டித்துறைப் பகுதி மீனவரொருவர் மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்துள்ளார்.

இம்முறைப்பாடு தொடர்பில், மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலக இணைப்பாளராகிய ருவான் சந்திரசேகர தீவக கடற்படை அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டதற்கிணங்க படகை நீதிமன்ற அனுசரணையுடன் உரியவரிடம் சேர்ப்பதற்கு இணக்கம் காணப்பட்டுள்ளது. (உ-43)

# வேலையற்ற பட்டதாரிகளுக்கு 12 மாத தொழிற் பயிற்சி

## மாதாந்தம் நாலாயிரம் ஊதியம்

(கொழும்பு)

தொழில் மற்றும் வேலைவாய்ப்பு அமைச்சில் தம்மை பதிவு செய்திருந்த தொழில் வாய்ப்பற்ற பட்டதாரிகளுக்கான 'தருண-அருண' திட்டத்தின் கீழ் முதலில் 10 ஆயிரம் பட்டதாரிகள் விரைவில் தனியார் துறையில் பயிற்சிகளைப் பெறவுள்ளனர்.

உலகவங்கியின் உதவியுடன் ஆரம்பிக்கப்பட்டிருக்கும் இத்திட்டத்தினை தொழில் அமைச்சர் மகிந்த சமரசிங்க மே தினத்தன்று தொடக்கி வைத்துள்ளார்.

மேற்படி திட்டத்தின் கீழ் தொழில் வேலைவாய்ப்பு அமைச்சில் தம்மைப் பதிவுசெய்திருக்கும் மொத்தம் 25 ஆயிரத்து 800 பட்டதாரிகளுக்கு அவரவர் தகுதிகள், திறன்களுக்கேற்ப குறிப்பிட்ட துறைகளில் பயிற்சிகள் வழங்கப்படும். இப்பட்டதாரிகளில் 18 ஆயிரம் பேர்கள் உள்வாரிப் பட்டதாரிகளாவர். மீதிப்பேர் வெளிவாரி பட்டதாரிகளாவர்.

'தருண-அருண' வேலைவாய்ப்பு பயிற்சித் திட்டத்தை மே தினத்தன்று ஆரம்பித்து வைத்த அமைச்சர் இந்தப் பட்டதாரிகளுக்கு 12 மாதங்கள் முழுமையான தொழிற் பயிற்சி வழங்கப்படுமென்றும், பயிற்சிக் காலத்தில் மாதாந்தம் 4 ஆயிரம் ரூபா தருண-அருண நிதியத்திலிருந்து வழங்கப்படும் என்றும் மேற்படி பட்டதாரிகள் எந்தெந்த நிறுவனங்களில் பயிற்சிகளைப் பெற்றார்களோ அந்தந்த நிறுவனங்களிலேயே அவர்கள் தொழில் வாய்ப்பினைப் பெறுவர் என்றும் தெரிவித்தார்.

இவர்களுக்கு பயிற்சி அளிப்பதற்கு 595 தனியார் துறை நிறுவனங்கள் முன்வந்துள்ளன. இவற்றுள் சில நிறுவனங்கள் இலவசமாக இவர்களுக்கு ஆங்கில வகுப்புக்களையும், கணனி வகுப்புக்களையும் நடத்த முன்வந்துள்ளன. (உ)

# தொடர் சொற்பொழிவில் உலக சாதனை புரிய முயற்சி

(வல்வெட்டித்துறை)

இரண்டாவது உலக இந்து மாநாட்டை முன்னிட்டு எட்டரை மணித்தியாலங்கள் தொடர் சொற்பொழி வாற்றுவதன் மூலம் புதிய உலக சாதனை நிகழ்த்தப்படவுள்ளது.

எதிர்வரும் 10ஆம் திகதி சனிக்கிழமை குமிழடி சித்திவிநாயகர் தேவஸ்தானத்தில் இரவு 8.30 மணி தொடக்கம் எட்டரை மணித்தியாலங்கள் 'மகா பாரதம்' என்ற தலைப்பில் தொடர் சொற்பொழிவினை நிகழ்த்தவுள்ளார் உடுப்பிட்டி வடக்கு நெற்கொழு ஞானவைரவர் தேவஸ்தானத்தின் பிரதம குருவும், இந்து மறுமலர்ச்சி ஆதீன முதல்வரும், குருமார் அர்ச்சகர் மகாசபை அமைப்பாளரும், இந்து ஆசிரியர் முன்னணி இணைப்பாளரும், இந்து தமிழர் மறுமலர்ச்சிக் கூட்டணிச் செயலாளருமான 'சித்தாந்தசாகரம்' 'செஞ்சொற்சாகரம்' அழகு ஜெகதீஸ்வர தேசிகர்.

இதுவரை, ஏழரை மணித்தியாலங்கள் தொடர் சொற்பொழிவாற்றியமையே சாதனை நிகழ்வாக கருதப்படுகிறது. இதனை கொழும்பு தமிழ்ச் சங்கத்தின் ஆதரவில் 'சோக்கெல்லோ சண்முகம்' நிகழ்த்தியிருந்தார். (உ-63)



வல்வை சிவகுரு வித்தியாசாலை கணனியகத் திறப்பு விழாவில் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட ஓய்வு பெற்ற சிங்கப்பூர் தேசிய பல்கலைக் கழக பேராசிரியர் எஸ்.இராஜேந்திரன் மங்கல விளக்கேற்றுவதையும், அருகில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட முன்னாள் உப அதிபர் ஏ.சுப்பிரமணியம் நிற்பதையும் படத்தில் காணலாம். படம்:கிருபதர்ஷன்





யாழ். கோட்டைப் பகுதியின் மேற்குப் புறத்தில் முகாம் அமைப்புப் பணிகள் தீவிரமாக இடம்பெற்று வருகின்றன.
படங்கள் : க.பவன்

## இன்னும் ஒரு தகவல்

# உயர்ந்த பண்பு

மற்றவர்களின் பூமியைத்தாம் சேர்த்துக்கொள்வேண்டும் என்கிற காரணத்திற்காகத்தானே சேதங்கள் சண்டை போட்டுக்கொள்கின்றன. அப்படி ஒருபோர் நடந்துகொண்டிருந்தசமயம், பிரெஞ்சுத் துருப்புக்கள் ஜெர்மனியில் முகாமிட்டிருககிறார்கள். அவர்களின் படையில் நிறைய குதிரைகள் உண்டு. அவைகளுக்கு ஆகாரம் தேவைப்பட்டது. புது இடம். என்ன பண்ணுவது என்று யோசித்த படைத்தலைவர் ஒரு படைப்பிரிவின் அதிகாரியை கூப்பிட்டார். குதிரைகளுக்கு தேவையான புல்லை கொண்டுவரும் படி ஆணையிட்டார்.

உடனே அந்த அதிகாரி தன்னிடமிருந்த படைவீரர்களை அழைத்துக்கொண்டு புறப்பட்டார். ஒரு குறிப்பிட்ட இடத்திற்கு போனார். அங்கே மரங்கள் மட்டும் தான் இருந்தன. அந்தப் பகுதி ஒரு சிறிய பள்ளத்தாக்கு! சுற்றிலும் குன்றுகள். கொஞ்சத்தூரத்திலே ஒரு குடிசை தெரிந்தது. எல்லோரும் அங்கே போனார்கள். அந்த அதிகாரி தன்னுடைய படைவீரர்களில் ஒருவனை விட்டு, அந்தக் குடிசையின் கதவை தட்டச் சொன்னார். தட்டின உடனே குடிசையின் கதவு திறந்தது. வெள்ளைத் தாடியோடு ஒரு வயதான தாத்தா வெளியில் வந்தார். படைத்தலைவர் அவரைப் பார்த்து, "பெரியவரே! எங்கள் குதிரைகளுக்குப் புல்தேவைப்படுகிறது. இந்தப் பகுதியில் புல் எங்கே கிடைக்கும்? இடத்தைக் காட்டுங்கள் நாங்கள் அறுத்துக் கொள்கிறோம்" என்றார்.

"சரி! என்னோடு வாருங்கள்" என்று சொல்லி அந்தத் தாத்தா புறப்பட்டார். அவரின் பின்னால் இவர்கள் எல்லோரும் புறப்பட்டார்கள். அந்தத் தாத்தா அவர் பாட்டுக்குக் காடுமேடு எல்லாம் நடந்து போய்க்கொண்டிருந்தார். இவர்களும் பின்னால் போய்க்கொண்டிருந்தார்கள். ஒரு மணிநேரம் நடந்திருப்பார்கள்.

வழியில் ஒரு புல் நிலம் இருந்தது. படைத்தலைவர் அந்த இடத்தைப் பார்த்ததும், "இது போதுமே... இந்த இடத்திலேயே புல் அறுத்துக் கொள்ளலாமே" என்றார். "இங்கே வேண்டாம் இன்னும் கொஞ்சத்தூரம் போக வேண்டும். கொஞ்சம் பொறுத்துக் கொண்டு என் பின்னால் வாருங்கள் என்று சொல்லிக் கொண்டு போய்க் கொண்டே இருந்தார் அந்தத் தாத்தா. படைவீரர்களும் சரியென்று சொல்லி போய்க்கொண்டே இருந்தார்கள். அடுத்தபடியாகவும் புல்அறுப்பதற்கு வசதியாக இரண்டு மூன்று இடங்கள் இருக்கத்தான் செய்தன. இருந்தாலும் அவைகள் எல்லாம் வேண்டாம் என்று சொல்லி வேறு ஒரு புல் நிலத்துக்கு இவர்களை அழைத்துக் கொண்டு போனார்.

"அங்கே ஒரு நிலத்தைக் காட்டி இதிலே புல்லை அறுத்துக்கொள்ளுங்கள் என்றார். உடனே அந்தப் படைவீரர்கள் எல்லோரும் புல்லை அறுத்து மூட்டை கட்டிக்கொண்டார்கள். அதன் பின்னர் குதிரைமேல் ஏறி புறப்பட்டார்கள். அந்தச் சமயத்தில் அந்தப் படைத்தலைவர் இந்தத் தாத்தாவை பார்த்து "ஏன் ஐயா பெரியவரே - அனாவசியமாக எங்களை இவ்வளவு தூரம் கூட்டிக்கொண்டு வந்தீர்களே - அங்கேயே வருகிற வழியில் புல்நிலங்கள் நிறைய இருந்தனவே. அங்கேயே புல்லை அறுத்திருக்கலாமே!" என்றார்.

இதற்கு அந்தத் தாத்தா "உண்மைதான்... ஆனால் அந்த நிலங்கள் எல்லாம் என்னுடையவை அல்ல. இது தான் என்னுடைய நிலம்" என்றார். பெரியவருடைய இந்தப் பண்பு அந்த அதிகாரியை ஆச்சரியப்பட வைத்துவிட்டதாம். பிரெஞ்சு எழுத்தாளர் பென்னார்தென் தெசென் பியேர் என்பவர் எழுதிய ஒரு குட்டிக்கதை இது. இந்தப் பண்பு நம்மில் எத்தனை பேரிடம் இருக்கின்றது?

மாற்றான் நிலத்தை காட்டி "அறுத்துக்கொண்டு போங்கள்" என்று சொல்லுகிறவர்கள் தான் இன்று அதிகம். நமது ஆள் ஒருவன் குதிரை வைத்திருந்தான். அதை எந்த நேரமும் வண்டியிலே பூட்டி நிறுத்தியேதான் வைத்திருப்பார். இரவு பகலாக அப்படியே நிண்டு கொண்டிருக்கும். தரையிலே படுக்கவிடுவதில்லை. இதைப் பார்த்து விட்டு பரிதாபப்பட்ட ஒருவர் "ஏன் அப்பா! உனக்கு ஜீவகாருண்யமே கிடையாதா? எப்பொழுது பார்த்தாலும் உன் குதிரையை வண்டியிலேயே பூட்டி, நிறுத்தியே வைத்திருக்கிறாயே. அவிழ்த்துவிடக் கூடாதா?" என்று சொன்னார்.

"குதிரையை அவிழ்த்துவிட்டால் பொத்தென்று கீழே விழுந்துவிடும் சார்! அதற்கு ஓர் ஆதார பலம் வேண்டும் என்பதற்காகத்தான் பூட்டி வைத்திருக்கிறேன்" என்றான்.

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# சிங்கப்பூரில் ஈழத்து நூல்கள் கண்காட்சி

(கொழும்பு)

சிங்கப்பூரில் ஈழத்து நூல்கள் கண்காட்சி ஒன்றை நடத்துவதற்கு நடவடிக்கை எடுத்து வருவதாக அண்மையில் இலங்கை வந்துள்ள திருக்குறள் கலாநிதியும், சிங்கப்பூர் ஈ.வி.அஸ்பதிப்பக அதிபருமான ஈ.வி. சிங்கம் தெரிவித்துள்ளார்.

பிரபல ஈழத்து எழுத்தாளர்களின் நூல்களின் கண்காட்சி ஒனறை நடத்துவதன் மூலம் பெருமளவு ஈழத்து நூல்களை விற்பனை செய்யலாம் என்ற நோக்கிலேயே இந்தக் கண்காட்சி நடத்தப்படவுள்ளது.

இதன் அடிப்படையில், ஈழத்து நூலகளின் விபரங்களை ஈ.வி.சிங்கம் திரட்டிவருகிறார்.

(உ-10)

### புரிந்துணர்வு உடன்படிக்கையின் பின்

# வடக்கு கிழக்கு மாகாணத்தில் வெடிப்பொருட்களால் 907 பேர் பாதிப்பு

(தென்மராட்சி)

அரசுக்கும் - தமிழீழ விடுதலைப் புலிகளுக்குமிடையில் புரிந்துணர்வு உடன்படிக்கை ஏற்பட்டதன் பின்னர் வடக்கு கிழக்கு மாகாணத்தில் இதுவரை 907 பேர் மிதிவெடி மற்றும் வெடிபொருட்களால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

யுனிசெவ் அமைப்பு அண்மையில் வெளியிட்ட அறிக்கை மூலம் இது விடயம் தெரியவந்துள்ளது.

இதேவேளை, யாழ்ப்பாண மாவட்டத்தில் 579 பேர் மிதிவெடி மற்றும் வெடிபொருட்களால் பாதிப்படைந்துள்ளனர். அவர்களுள் 62 பேர் உயிரிழந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

மேலும், யாழ்ப்பாணம் அரசினர் போதனா வைத்தியசாலையின் புள்ளிவிபரங்களின் பிரகாரம்- 2003ஆம் ஆண்டின் முதல் காலண்டுப் பகுதியில் 400 பேர் வீதி விபத்துக்களில் காயமுற்றுள்ளனர்.

இதில் 6பேர் விபத்துக்கள் காரணமாக உயிரிழந்துள்ளனர் என தெரியவருகிறது. (உ-77)

## வடக்கு கிழக்கு மாகாண,

# உள்ளூராட்சி மன்ற நடவடிக்கைகளை மேம்படுத்துவதற்கான போட்டிகள்

(பருத்தித்துறை)

யாழ். மாவட்ட உள்ளூராட்சி மன்றங்களிற்கிடையே வடக்கு கிழக்கு மாகாண உள்ளூராட்சி திணைக்களத்தினால் நடாத்தப்படும் போட்டிகளுக்கான பரிசீலனையும், புள்ளிவழங்கும் நடவடிக்கையும் நேற்று முன் தினம் ஆரம்பமாகி உள்ளன.

வடக்குகிழக்கு மாகாண உள்ளூராட்சித்திணைக்களம், யாழ்.மாவட்டப் போட்டிகளுக்கென முல்லைத்தீவு மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர் எஸ். இராசையா தலைமையில் யாழ். திட்டமிடல் உதவிப் பணிப்பாளர் எஸ். மகேஸ்வரன், கிளிநொச்சி சமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் எஸ். பகிரதன் ஆகியோர் அடங்கிய குழுவை நியமித்துள்ளது. இக்குழுவினர் கடந்த 6ம் திகதி யாழ். மாவட்டத்தில் தமது பணிகளை ஆரம்பித்துள்ளன எனவும், 15ஆம் திகதி வரை இப்பணிகள் தொடர்ந்து நடைபெறும் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

நாட்டின் உள்ளூராட்சி நடவடிக்கைகளை மேம்படுத்தும் முகமாக உள்ளூராட்சி மன்றங்களுக்கிடையே முகாமைத்துவ சேவைகளை வழங்குவது பற்றியபோட்டிகள் மாகாண சபை உள்ளூராட்சி அமைச்சின் ஏற்பாட்டில் வடக்கு கிழக்கு மாகாண உள்ளூராட்சி திணைக்களத்தினால் நடாத்தப்படுகின்றன.

இப்போட்டிகளில் வெற்றியீட்டும் உள்ளூராட்சி மன்றங்களுக்கு மாகாணசபை பெறுமதிமிக்க பரிசில்களை வழங்கவுள்ளது. தேசிய மட்டப் போட்டியில் வெற்றியீட்டும் உள்ளூராட்சி மன்றங்களுக்கும் அவ்வாறு வெற்றிபெறும் உள்ளூராட்சி மன்றங்களின் உத்தியோகத்தர், ஊழியர்களுக்கும், இலங்கை உள்ளூராட்சி அமைச்சு விருதுகள், சான்றிதழ்கள் வழங்கவுள்ளது.

தற்போது வடக்குகிழக்கு மாகாண உள்ளூராட்சித்திணைக்களத்தினால் யாழ். மாவட்டத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ள நடுவர் குழு யாழ். மாவட்டதிலுள்ள 10 பிரதேசசபைகள் பற்றிய பரிசீலனைகளை மேற்கொள்ளும். மாநகர, நகரசபைகளுக்கிடையேயான பரிசீலனைகள் பின்னர் மேற்கொள்ளப்படும்.

இப்போட்டிகளின்போது உள்ளூராட்சிமன்றங்களின் நிறுவனச்சூழல், உள்ளக நிர்வாகம், சட்டங்களும் துணை விதிகளும், நடவடிக்கைகள், வரவுசெலவுத்திட்டம், வருமானம், மக்களின் பங்கேற்பு, மனித வளமும் புதிய தொழில்நுட்பமும், வளங்களை பயனுள்ளவாறு பயன்படுத்தல், அபிவிருத்தி நடவடிக்கைகள் ஆகிய செயற்பாடுகளில் முக்கிய கண்காணிப்புச் செலுத்தபட்டுவருகின்றது. (உ-52)

## இராசி பலன்

08.05.2003

(சித்திரை 25,வியாழன்)

சப்தமி - பி.இ. 12.57 வரை

பூசம் மு.இ. 10.43 வரை

இராகுகாலம் - 1.25 - 2.25

சுபநேரம் - 7.25 - 8.55

**மேடம்**
கல்வியில் ஆர்வம், உஷ்ணவியாதி, அபகீர்த்தி, விருந்துபசாரம்

**இடபம்**
கூட்டு முயற்சி, புதியபொருட்கள் சேர்க்கை, காரிய நன்மை, குடும்ப மகிழ்ச்சி

**மிதுனம்**
அதிகாரம், எடுத்தகாரியம் தாமதமாகும், அதிகசெலவு, குடும்பக் கவலை

**கடகம்**
பெரியோரால் மதிக்கப்படுதல், சயனசுகம், புதியமுயற்சி, நல்ல தகவல்

**சிங்கம்**
பிரயாணக் கஷ்டம், தந்தை வழி உறவு, மனக்கிலேசம், சுபசெலவு

**கன்னி**
தெய்வசிந்தை, கீர்த்தி, வருமானம் அதிகரிக்கும், முயற்சி பலிதம்,

**துலாம்**
முயற்சி கைகூடும், நல்லசம்பவம், பிறர் உதவி, தொழில் விருத்தி

**விருச்சிகம்**
வீண்பயம், வயிற்றுவலி, உடல் உழைப்பு, காரிய தாமதம்

**தனுசு**
அமைதிக்குறைவு, வீண் பிரச்சினை, காரிய தடங்கல், வாகன பயம்

**மகரம்**
சென்ற இடத்தில் செல்வாக்கு, களஸ்திர நன்மை, உறவினர் வருகை முயற்சி பலிதம்

**கும்பம்**
நல்லசம்பவம், சத்துரு ஜெயம், தனவரவு, காரிய சித்தி

**மீனம்**
தாழ்ந்த சுபாவம், புத்திரரால் கவலை, எடுத்தகாரியம் தாமதமாகும், மேன்மை

(பழையநேரப்படி கணிப்பிடப்பட்டது)

வளவன்.

### மாற்றுத்தமிழ்க்கட்சிகளுடன்

# ஐரோ.ஒன்றிய நாடாளுமன்ற உறுப்பினர் சந்தித்துப் பேச்சு

(மட்டக்களப்பு)

தமிழீழ விடுதலைப்புலிகளினால் மேற்கொள்ளப்படும் சில முரண்பாடான நடவடிக்கையினால் பொதுமக்கள் எதிர்நோக்கும பிரச்சினைகள் தொடர்பாகவும், மாற்று அரசியல் கட்சிகளிற்கு எதிராக இவர்கள் மேற்கொள்ளும் அடாவடித்தனமான செயற்பாடுகள் குறித்தும் நாம் ஐரோப்பிய ஒன்றிய நாடாளுமன்ற உறுப்பினர் ஜோன் கோல்கிஸ்னனிடம் தெரிவித்துள்ளதாக ஈ.பி.ஆர்.எல்.எவ் வரதர் அணியின் தேசிய அமைப்பாளர் துரைரட்ணம் தெரிவித்துள்ளார்.

வடக்குகிழக்கு மாகாண நிலைமைகள் குறித்து நேரில் கண்டறிவதற்காக அண்மையில் இலஙகை வந்துள்ள ஐரோப்பிய ஒன்றிய நாடாளுமன்ற உறுப்பினர் நேற்று முன்தினம் மட்டக்களப்பிற்குச் சென்று தமிழ்க்கட்சிகளான புளொட், ஈ.பி.டி.பி, வரதர் அணி ஆகிய அமைப்பினரைச சந்தித்து பேசியுள்ளபோதே தாம் இதனைத் தெரிவித்ததாகக் கூறிய துரைரட்டணம் இது பற்றி மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

இச்சந்திப்பில் ஈ.பி.ஆர்.எல்.எவ், ஈ.பி.டி.பி, புளொட் ஆகிய கட்சிகளின் சார்பில் நாலுவிடயங்களை அவரிடம் நாம் முன் வைத்திருக்கிறோம்.

மாற்றுஅரசியல் கட்சிகளான எம்மீது புலிகள் புரியும் அடாவடித்தனங்களை நிறுத்தவேண்டும்.

பொதுமக்கள் மீது அவர்கள் போடும் கடுமையான சட்டதிட்டங்கள் மற்றும் வாகனங்களை கடத்துதல், வியாபாரிகளிடம் இருந்து பலாத்காரமான முறையில் பணம் வசூலித்தல், நிர்வாகங்களில் அத்துமீறி தலையிடுதல் போன்ற விடயங்களையும் அவரிடம் முன்வைத்துள்ளோம்.

மூன்றாவதாக தேர்தல் நடைபெறும்போது ஏற்படக்கூடிய பிரச்சினைகள் தொடர்பாகவும் அவரிடம் எடுத்துக் கூறினோம்.

குறிப்பாக மாற்றுக் கட்சிகள் மற்றும் பொதுஜனஐக்கிய முன்னணி போன்ற சில தேசிய கட்சிகளை ஓரம் கட்டும் படியாக மக்களிடையே விசமத்தனமான பிரசாரங்களை மேற்கொள்வது என்ற விடயங்கள் பற்றியும் அவரிடம் விளக்கியுள்ளோம்.

இதனை செவிமடுத்த ஐரோப்பிய ஒன்றிய பாராளுமன்ற உறுப்பினர் அரசுடனும் - புலிகளுடனும் இது தொடர்பாக தாம் விரைவில் பேசவிருப்பதாகவும் இனிவரும் பேச்சுவார்த்தையின் போது ஜனநாயகத் தன்மைகள், மனித உரிமை மீறல்கள் ஆகியவிடயங்களுக்கு முக்கியத்துவம் அளிக்கும் வகையில் தாம் சம்பந்தப்பட்டவர்களுடன்பேசி நடவடிக்கை எடுப்பதாகவும் எம்மிடம் உறுதியளித்தார் எனவும் தெரிவித்தார்.

(உ-10)

# களுத்துறை அரசியல் கைதிகள் விடுதலைவேண்டி பிரார்த்தனை

(கொழும்பு)

களுத்துறைச் சிறைசாலையில் தடுத்து வைத்துள்ள தமிழ் அரசியல் கைதிகள எதிர்வரும் 10 ஆம் திகதி சனிக்கிழமை அன்று தமது விடுதலைககாக பிரார்த்தனையில் ஈடுபடப் போவதாக அறிவித்துள்ளனர்.

சர்வமதத் தலைவர்களும் தமது விடுதலையை அக்கறைகொணடோரும் மேற்படி பிரர்த்தனையில் ஈடுபடுமாறு அவர்கள் கேட்டுள்ளனர்.

இது தொடர்பாக கைதிகள் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில்,

எமது விடுதலைக்காக கடவுள் தான் கருணைகாட்டவேண்டும். எமது கோரிக்கைகளை கடவுளிடம் தான் நாம் இனி முறையிடவேண்டும். அரசியல் வாதிகளை நம்பி இனி எந்தவித பலனும் எமக்கு கிடைக்கப்போவதில்லை என்றுள்ளது.

இதேவேளை, சிறைச்சாலையில் தடுத்துவைக்கப்பட்டுள்ள கைதிகளை விரைவில் விடுதலை செய்வதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருவதாக அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸின் தலைவர் விநாயகமூர்த்தி தெரிவித்துள்ளார். (உ-10)

தக்காரினத்தனாய்த்தொழுக வல்லானைச்
செற்றார் செயக் கிடந்ததில்
– குறள்

# வலம்புரி

## பலதரப்பு முயற்சி

அரசும், விடுதலைப்புலிகளும் செய்துகொண்ட சமாதான முயற்சியில் ஏற்படடுள்ள தேக்கநிலை, உள்நாட்டில் ஏற்படுத்திய தாக்கத்தைவிட சர்வதேசத்தின் மத்தியில் ஏற்படுத்திய தாக்கம் பெரிதாகவே உள்ளது.

இலங்கை மக்களைப் பொறுத்தவரை இனிமேல் யுத்தம் நடைபெறாது என்ற நம்பிக்கையில் அவர்கள் உறுதியாக உள்ளனர். ஆனால், சர்வதேசத்தின் பார்வையில் அத்தகையதொரு நம்பிக்கை தென்படவில்லை. அரசுக்கும், விடுதலைப்புலிகளுக்கும் இடையே மீண்டும் யுத்தம் வெடித்தால் அதன் விளைவு பாரதூரமாக இருக்கும் என்பது சர்வதேசத்தின் கணிப்பு. அதன் காரணமாக எப்பாடுபட்டும் தேக்க நிலையை அடைந்துள்ள சமாதான முயற்சியை தொடரவேண்டும் என்பது அவர்களின் நிலைப்பாடு.

இதன் காரணமாக நோர்வே, ஜப்பான் என சர்வதேச நாடுகள் அரசையும், விடுதலைப் புலிகளையும் அடிக்கடி சந்தித்துப் பேச்சுக்கள் நடத்தி வருகின்றன. இதில் முக்கிய சந்திப்பாக விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரனுக்கும், ஜப்பான் தூதுவர் அகாஷிக்கும் இடையே நேற்றையதினம் இடம்பெற்ற சந்திப்பைக் கூறமுடியும். ஏழாம் சுற்றுச் சமாதானப் பேச்சுக்கள் ஸ்தம்பித்த நிலையில் ஜப்பானில் நடைபெறவுள்ள இலங்கைக்கு நிதியுதவி வழங்கும் மாநாட்டில் விடுதலைப்புலிகளைப் பங்குபற்ற வைப்பதில் ஜப்பான் தூதுவர் அகாஷி பெரும் முயற்சி எடுத்து வருகிறார்.

ஜப்பானில் நடைபெறும் மாநாட்டில் விடுதலைப் புலிகள் பங்குபற்றுவார்களாயின் ஏழாவது சுற்றுச் சமாதானப் பேச்சுக்கள் நடைபெறுவதில் எந்தத் தடையும் இருக்க முடியாது. அதேவேளை, இலங்கைக்கு உதவி வழங்கும் ஜப்பான் மாநாட்டில் விடுதலைப்புலிகள் பங்குபற்றத் தவறினால் உலக நாடுகளின் நிதியுதவி கிடைக்காமல் போகலாம். எனவே, ஜப்பான் மாநாட்டில் விடுதலைப் புலிகளை பங்குபற்ற வைப்பதில் நோர்வேயும் ஜப்பானும் பகீரத முயற்சி செய்கின்றன.

இதேவேளை, சமாதான முயற்சிகள் தேக்கமடைந்துள்ள நிலையில் இலங்கை இந்தியாவை இறுகப் பிடித்துக் கொள்வதையும் அவதானிக்க முடிகிறது.

சதீஸ் நம்பியாரின் அறிக்கை வெளியிடப்படவிருக்கும் இந நேரத்தில் சமாதான முயற்சிகள் தேக்க மடைந்திருப்பது சதீஸ் நம்பியாரின் அறிக்கையையும் மாற்றியமைப்பதற்கு ஏதுவாக அமையலாம். எதுவாயினும் நிலைமையை பொறுத்திருந்தே பார்க்க வேண்டும்.

# தர்மத்தின் வழி சமாதானத்தை நிலைபெற வைக்க இரண்டாவது உலக இந்து மாநாடு வழிகாட்டும்

**''கொழும்பில் நிகழ்ந்த 2வது உலக இந்து மாநாட்டைப் போன்று சிறப்பியல்புகளை வேறெங்கும் காணவில்லை'' (அவுஸ்திரேலியாவிலிருந்து வருகைதந்த டாக்டர் சோமஸ் கந்தக் குருக்கள் புகழாரம்)**

2வது உலக இந்து மாநாட்டிற்கு மேற்கு அவுஸ்திரேலிய சைவ மகாசபையின் சார்பிலும் அவுஸ்திரேலிய இந்துக் குருமார் கவுன்சிலின் சார்பிலும் மாநாட்டுப் பிரதிநிதியாக அவுஸ்திரேலியாவி



லிருந்து வருகை தந்த இந்துமதக் குருவும், அவுஸ்திரேலிய திருமணப் பதிவு அதிகாரியுமான டாக்டர் சிவ ஸ்ரீ சோமஸ்கந்தக் குருக்கள் கொழும்பில் நடைபெற்ற 2வது உலக இந்து மாநாட்டைப் பற்றிக் குறிப்பிடுகையில் நான் உலகின் பல பாகங்களிலும் நடைபெற்ற பல உலக இந்து மாநாடுகளிலும் தமிழ் மாநாடுகளிலும் சைவ மாநாடுகளிலும் பேராளராக கலந்து கொண்டுள்ளேன். ஆயினும் சைவத்திலும் தமிழிலும் மேம்பட்டு விளங்கும் இலங்கையின் கொழும்பு நகரில் நடைபெற்ற 2வது உலக இந்து மாநாட்டினைப் போல் சிறப்புக்களும் எழுச்சியும் பொருந்திய மாநாட்டை உலகின் வேறெங்கும் காணவில்லை என்றார்.

மேலும் இந்து கலாசார அமைச்சர் மிகுந்த கவனத்துடன் மாநாட்டுக்குரிய ஒழுங்குகளைத் தானே முன்னின்று ஏற்பாடுகளைச் செய்தமை இத்துணைச் சிறப்புக்கு முக்கிய காரணம் எனலாம்.

### பேராளர்களுக்கான உபசரிப்பு

மாண்புமிகு அமைச்சர் தியாகராஜா மகேஸ்வரன் மாநாட்டுக்கு வெளிநாடுகளிலிருந்து வருகைபுரிந்த பேராளர்களுக்குத் தங்குமிடம், உணவு, போக்குவரத்து வசதிகள் மட்டுமன்றி ஒவ்வொருவருக்கும் ''மாநாட்டு ஆய்வுக் கட்டுரைகளின் தொகுப்புப் பிரதி'' நிகழ்ச்சி நிரல்கள் விசேட அழைப்பிதழ்கள் வாகனம் நிறுத்தும் பாஸ், தேனீர், சிற்றுண்டி உணவுகளுக்குரிய வவுச்சர்கள், லெட்டர்பாட், பேனா அனைத்தும் உள்ளடங்கிய கைப்பை ஒன்றினையும் வழங்கியிருந்தார். அவுஸ்திரேலியாவிலிருந்து மேற்கு அவுஸ்திரேலியா சைவ மகா சபையின் சார்பில் வருகை தந்த எனக்கும் இவற்றுடன் சிவாச்சாரியார்களுக்கான பிரத்தியேக வரிசையிலும் இடம் அளித்திருந்ததை மறக்க இயலாது.

'இந்து மாநாட்டுக்கு சிவாச்சாரியார்களே முன்னிடம் வகிக்க வேண்டியவர்கள்' என்றும் உயரிய கருத்தை மனதில் கொண்டிருந்த மாண்புமிகு அமைச்சர் தியாகராஜா மகேஸ்வரன் அவர்கள் முதுபெரும் சிவாச்சாரியார்களுக்கு செய்த கௌரவச் சிறப்புக்கள் நமது நாட்டில் சமயமும் கலாசாரமும் சிறந்து ஓங்குவதற்கு அந்தணர்களின் ஆசியும் ஆண்டவனின் அருளும் அத்தியாவசியம் என்பதை உணர்த்தியது. மாநாட்டை ஆரம்பித்து வைப்பதற்கு சிறப்பு வருகை புரிந்து நாட்டின் பிரதமர் மாண்புமிகு ரணில் விக்கிரமசிங்க அவர்களை வாழ்த்தவும் வரவேற்கவும் இந்துக்குருமார்களே தகுந்தவர்கள் என்று தீர்மானித்தும் வேதபாராயணம் திருமுறை பாராயணம் இவற்றுடன் குத்துவிளக்கு ஏற்றி மாநாட்டை ஆரம்பித்த ஒழுங்குகளும் பாராட்டப்படவேண்டியவை ஆகும். அதிகாலை முதல் நிகழ்ச்சியாக கணபதி ஹோமத்துடன் மாநாடு ஆரம்பமாகியது. நமது சமய கலாசாரங்களை அனைவரும் அறிந்து புகழுவதற்கு அரிய வாய்ப்பாக இருந்தது.

### ஆய்வு அரங்கங்கள்

சைவத்தையும் தமிழையும் கலை கலாசாரங்களையும் நமது நாட்டில் வளர்த்தவர்களாகிய மாமனிதர்களின் பெயரால் ஆய்வு அரங்கங்கள் ஒழுங்கு செய்ததும் அங்கு பன்னாட்டு பேராளர்கள் தமது அறிவு சார்ந்த ஆய்வுக் கட்டுரைகளை வாசித்தும் பார்வையாளர்களாகக் கலந்து கொண்ட அறிஞர் பெருமக்கள் கலந்துரையாடலின் போது பலதரப்பட்ட கேள்விகளைத் தொடுத்ததுவும் கட்டுரையாளர்கள் அதற்கு தகுந்த விளக்கவுரைகளைத்தந்ததுவும் அறிவுக்கு விருந்தாக அமைந்தது.

ஆய்வாளர்கள் அலசி ஆராய்ந்த ஆக்க பூர்வமான தீர்மானங்களை அமைச்சருக்குத் தெரிவித்து அவற்றை நடைமுறைப்படுத்துவதன் அவசியத்தை எடுத்துரைத்த ''தமிழருவி சிவகுமாரனின் வேண்டுகோள் மிகவும் அத்தியாவசியமானது''

மகளிர் நடத்திய கருத்தாளம் மிக்க நிகழ்ச்சியில் தலைமை தாங்கிய புலவர் திருமதி வசந்தா வைத்தியநாதனும் ஏனைய அறிவும் பேச்சாற்றலும் மிக்க பெண்மணிகளும் வேத காலம் முதல் இக்காலம் வரை பெண்களின் நிலை பற்றி மிகவும் சிறப்பாக எடுத்துக் கூறியது. இந்துப் பெண்களின் உயர் நிலையை உலகறியும் படி செய்தது. இந்தப் பெருமையும் இந்து கலாசார அமைச்சரையே சாரும் என்பதில் ஐயமில்லை. வைதீக சமயமும், கோவில்களின் சிறப்பும், கல்வெட்டுக்கள், தத்துவக் கலைகளின் சிறப்புகளை கலாசாரத்தின் பெருமைகள் அரும்பெரும் நூல்கள் ஆலயங்களின் வரலாற்றுக்களைக் கொண்ட புகைப்படத் தொகுப்புக்கள் போன்றவற்றைக் கொண்ட கண்காட்சி நூலகம் போன்ற அனைத்துச் சிறப்பு அம்சங்களும் 2வது உலக இந்து மாநாட்டில் அமைந்து விளங்கியதைப் பார்த்துப பரவசமாகிவிட்டேன். காலிமுகத் திடலில் பொழுது போக்கு இடமாக மட்டுமன்றி சமயம், கலை, கலாசாரம் பேணி வளர்க்கும் இடமாகவும் மாற்ற முடியும் என்பதை அமைச்சர் தியாகராஜா மகேஸ்வரன் அவர்கள் நிரூபித்து விட்டார்கள். அது மட்டுமா? இத்தனை

**டாக்டர் சோமஸ்கந்தக் குருக்கள்**

அலுவல்களுக்கு மத்தியிலும் குருமார்கள், கலைஞர்கள், பேராளர்கள், பார்வையாளர்கள், அரசியற் பிரமுகர்கள் அத்தனை பேரையும் பார்த்தும், சிரித்தும், பேசியும் வரவேற்றும் ஓய்வு ஒழிச்சலின்றி அவர் பாடுபட்டதைப் பார்த்தால் அவரும் ஒரு உண்மைத் தொண்டர் என்பதை அனைவரும் உணரும்படி தோன்றியது. மலையகத்திலும், யாழ்ப்பாணத்திலும் இந்து மாநாடு தொடர்பான நிகழ்ச்சிகள் சிறப்பாக தர்மத்தின் வழி சமாதானத்தை நிலைபெறச் செய்வதற்கு எழுச்சி மிக்க இந்த இந்து மாநாடு நிச்சயம் வழிகாட்டும் என்பதில் ஐயமில்லை.

மாநாட்டின் போது ''மாதா பிதா குரு தெய்வம்'' என்றும் புத்தகங்கள் வழங்கப் பெற்றன.

''மேன்மை கொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்''

## சட்ட விரோத மண் அகழ்வு

(கொடிகாமம்)

தென்மராட்சி மந்துவில் பகுதியில் கடந்த சில வாரங்களாக சட்ட விரோதமான மண் அகழ்வு அதிகரித்துள்ளது.

இதனைத் தடுத்து நிறுத்த சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும் என அப்பகுதி மக்கள் கேட்டுள்ளனர்.

தொடர்ந்தும் இவ்வாறு சட்ட விரோதமான முறையில் மண் அகழப்படுமானால் சம்பந்தப்பட்ட பகுதியில் பௌதீக வளங்கள் மேலும் பாதிப்படையும் எனவும் மக்கள் தரப்பில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (உ-10)

# பொலிஸ்-பொதுமக்கள் தொடர்பை இலகுபடுத்த ஈ-பொலிஸ் சேவை

(கொழும்பு)

பொலிஸாரினால் பொதுமக்களுக்கு வழங்கப்படும் சேவைகள் மற்றும் பொலிஸ்-பொதுமக்களுக்கு இடையிலான தொடர்புகளை இலகுபடுத்தும் வகையில் 'ஈ-பொலிஸ்' எனும் பெயரில் புதிய இணையம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக உள்துறை அமைச்சர் ஜோன அமரதுங்க தெரிவித்துள்ளார்.

மேற்படி இணையத் தளத்தை அண்மையில் ஆரம்பித்து வைத்துப் பேசுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது தொடர்பாக மேலும் கருத்துக் கூறிய ஜோன் அமரதுங்க,

இதுவரை காலமும் மாதக் கணக்கில் செய்து முடிக்கப்பட முடியாத செயற்பாடுகளை இணையம் மூலம் சில நிமிடங்களில் செய்து கொள்ள முடியும்.

இதன் பிரகாரம் பொதுமக்கள் தமது முறைப்பாடுகளை உடனுக்குடன் அறிவித்துக் கொள்ளவும் மற்றும் கிளியறன்ஸ் நடவடிக்கைகள் பொலிஸ் அறிக்கை உட்பட பொதுமக்கள் பயன் பெறக் கூடிய பல்வேறு பயனுள்ள நடவடிக்கைகள் மேற்கொள்ள முடியும்.

பிரதமர் ரணில் விக்கிரம சிங்கவின் வழிகாட்டலில் அறிமுகப்படுத்தப்பட்ட ஈ-ஸ்ரீலங்கா திட்டத்திற்கமையவே ஈ-பொலிஸ் இணையமும் அமைக்கப்பட்டுள்ளது.

இது 3மாத கால தாமதத்தை ஏற்படுத்தும் செயற்பாடுகளை 5 நிமிடத்தில் செய்து முடிக்கக்கூடிய வகையில் அமைக்கப்பட்டுள்ளது.

மேலும் இதில் பொலிஸ் திணைக்களம் சம்பந்தமான கடந்த கால செயற்பாடுகள் நடைமுறைத் திட்டங்கள் தொடர்பான விடயங்களும் அடங்குகின்றன.

பொலிஸ் இலாகா தொடர்பிலான தகவல்களும் இதில் இடம்பெறுவதால் வெளிநாட்டவர்கள், பல்கலைக்கழக மாணவர்களின் ஆய்வு நடவடிக்கைகளுக்கும் இது உறுதுணையாக அமையும் என்றார்.

இதேவேளை இந்நிகழ்வில் கலந்துகொண்டு பேசிய பொலிஸ்மா அதிபர் ரீ.ஈ.ஆனந்தராஜா இத்தகைய பொலிஸ் இணையத்தை உபயோகிப்பதற்கு W.W.W. Police. lk என்பதைப் பயன்படுத்திக் கொள்ளலாம் என்றார்.

இதேவேளை அரசாங்கத்தினால் மக்களுக்குக் கிடைக்கவுள்ள சேவைகள் அரசின் திட்டங்கள் ஆகியவற்றை பொதுமக்கள் அறிந்து கொள்ளும் வகையில் ஈ-ஸ்ரீலங்கா எனும் இணைய செயற்திட்டத்தை இன்று பிரதமர் ரணில் ஆரம்பித்து வைக்கவுள்ளார் எனவும் இதற்கு முன்னோடியாகவே ஈ-பொலிஸ் இணையத்தை ஆரம்பித்ததாகவும் உள்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்க தெரிவித்தார். (உ-10)

## சிறப்பு நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

இரண்டாவது உலக இந்து மாநாட்டை ஒட்டிய சிறப்பு நிகழ்வு நாளை வெள்ளிக்கிழமை மு.ப. 9 மணிக்கு யாழ். உயரப்புலம் குணபாலன் வித்தியாசாலையில் பாடசாலை அதிபர் செல்வி பி.வடிவேல் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக சைவப்புலவர் சு.செல்லத்துரையும் சிறப்பு விருந்தினராக சி.கணேசவேலும் கலந்து கொள்ளவுள்ளனர். (உ-10)



## சாயி அருளமுதம்

என்னையும் எனது இயல்பையும் கண்டறியும் முயற்சியில் உங்கள் நேரத்தை வீணாக்க வேண்டாம். நான் போதிப்பதை விளங்கிக் கொள்வதேயன்றி யார் இந்த ஆசான் என்பதை விளங்க முற்படாதீர்கள். ஏனெனில் நான் உங்கள் புத்திக்கும் சக்திக்கும் அப்பாற்பட்டுள்ளேன். என்னுடைய பணியின் மூலமே நீங்கள் என்னை விளங்கிக் கொள்ள முடியும். அதனால் தான் நான் யாரென்பதை வெளிக்காட்டும் பொருட்டு 'அற்புதங்கள்' என உங்களால் கூறப்படும் எனது அறிமுக அட்டையை நானாகவே சில சமயங்களில் உங்களுக்குக் காண்பிக்கிறேன். மர்மத்தை அறிந்து கர்மத்தை அதாவது நான் ஒப்படைக்கும் பணியைத் தொடருங்கள்.

நன்றி

நாளாந்த நற்சிந்தனை

# சமயப் பாடசாலை ஆசிரியர் சேமநலன் நிதியம் அமைப்பு

(கொழும்பு)

சமயப் பாடசாலை ஆசிரியர்களின் சேம நலனுக்காக நிதியமொன்று ஆரம்பிக்கப்படவுள்ளதாக வர்த்தக விவகார அமைச்சர் ரவி கருணாநாயக்கா தெரிவித்துள்ளார்.

இந்நிதியம் மகாபொல நம்பிக்கை நிதியத்தின் கீழ் இயங்கவுள்ளதுடன், மகாபொல அதிகாரிகள் சமயப் பிரதிநிதிகள் மாவட்ட பிரதேச செயலாளர்கள் ஆகியோரைக் கொண்ட சபை ஒன்றினால் நிர்வகிக்கப்படவுள்ளது.

20 வருடங்களுக்கு மேல் சமயப் பாடசாலை ஒன்றில் ஆசிரியராக கடமைபுரிந்த ஒருவர் இந் நிதியத்தில் இருந்து அனுகூலங்களைப் பெற்றுக் கொள்ள முடியும்.

இத்தகைய ஆசிரியர் ஒருவர் அவர் கற்பிக்கும் பாடம் தொடர்பாக நடத்தப்படும் பரீட்சையில் சித்தி பெறவேண்டும்.

அடுத்த இரு மாதங்களுக்குள் இந்நிதியம் அமைக்கப்படவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

நாட்டில் 9 ஆயிரம் பௌத்த தர்ம பாடசாலைகளும் ஆயிரத்து 400 இஸ்லாமிய பாடசாலைகளும் ஆயிரத்துக்கும் அதிகமான கிறிஸ்தவ பாடசாலைகளும் 800 இந்து அறநெறிப் பாடசாலைகளும் இயங்கி வருவதாக அமைச்சு மதிப்பிட்டுள்ளது. (தி)

## வேலணைப் பிரதேசசபையில் இந்து மாநாட்டு நிகழ்வுகள்

(வேலணை)

இரண்டாவது உலக இந்து மாநாட்டை முன்னிட்டு வேலணை பிரதேச சபையினால் நடாத்தப்படும் சமய நிகழ்வுகள் நேற்றுக் காலை நந்திக் கொடி ஏற்றலுடன் ஆரம்பமானது.

இறுதிநாள் நிகழ்வுகள் நாளை வெள்ளிக்கிழமை பிரதேச சபை செயலாளர் செ. சண்முகராசா தலைமையில் நடைபெறும். இந்நிகழ்வில் ஆசிய உரையினை வேலணை பெருங்குளம் முத்துமாரி அம்மன் தேவஸ்தான பிரதம குருவும் ''இந்து மத தத்துவ நிலைப்பாடும் இன்றைய நிலையும்'' என்ற தலைப்பிலான விசேட சொற்பொழிவினை வி. சர்வேஸ்வரனும் வழங்கவுள்ளனர்.

விசேட பூசை வழிபாடுகளும் வேலணை சரஸ்வதி வித்தியாலய மாணவர்களின் பண் இசையும் இடம் பெறும். (த-3-11)

## இந்து மாநாட்டு எழுச்சி நிகழ்வுகள்

(யாழ்ப்பாணம்)

இரண்டாவது உலகஇந்து மாநாட்டை ஒட்டிய எழுச்சி பெருவிழா துன்னாலை தெற்கு கலிகை கந்தசாமி கோவிலில் அமைச்சர் மகேஸ்வரன் தலைமையில் இன்று மாலை 5.00மணிக்கு ஆரம்பமாகிறது.

இந்தியாவில் இருந்து வருகை தந்திருக்கும் பேராசியர் முனைவர் இரா. செல்வக்கணபதி உட்பட பேராசிரியர்கள் பலர் சொற்பொழி வாற்றவுள்ளதுடன் கலை நிகழ்வுகளும் இடம்பெறும். (த)

★★★

(யாழ்ப்பாணம்)

இலண்டாவது உலக இந்து மாநாட்டை ஒட்டி இந்துகலாசார அலுவல்கள் அமைச்சின் அனுசரணையுடன் நல்லூர் இளங்கலைஞர் மன்றம் நடத்தும் கலாசாரப்பெருவிழா இன்று மாலை4.00 மணிக்கு நல்லூர் இளங்கலைஞர் மண்டபத்தில் நடைபெறும். (த)

---

### ஜப்பான்...

தலைவர் பிரபாகரனுக்கு நினைவுச் சின்னமொன்றை வழங்கினார்.

இதேவேளை விடுதலைப்புலிகளின் தலைவர் வே. பிரபாகரன் யசுசி அகாஷிக்கு மதிய போசன விருந்தளித்து கௌரவித்தார்.

பேச்சுவார்த்தையை அடுத்து யசுசி அகாஷி நேற்று நண்பகல் கொழும்பு திரும்பினார்.(வ)

### பேச்சுக்களில்...

அரசுக்கு வழங்கியுள்ள கால அவகாசமாகும்.

யசுசி அகாஷியுடனான பேச்சுக்களின்போது இடம்பெயர்ந்த மக்களின் மீள் குடியேற்றத்தை வற்புறுத்திக் கூறிய தலைவர் பிரபாகரன் மக்களின் வாழ்வில் இயல்பு நிலை தோன்றவேண்டும் என்றும் கூறியுள்ளார். தமிழ் பேசும் மக்களின் பிரச்சினைகளை மனிதாபிமான அடிப்படையில் ஆராய்ந்து பார்த்தால் அவை எதுவும் தீர்க்கப்படவில்லை என்பது புலனாகும். எமது நாட்டுப் பிரச்சினைகளை வெளிநாடுகளில் உள்ள இராணுவத் தளபதிகளிடம் ஒப்படைத்து அவர்களின் சிபார்சுகளை அரசு எதிர்பார்த்து நிற்கிறது. இது அரசின் பலவீனத்தையே எடுத்துக் காட்டுகிறது. இது எமக்கு வருத்தத்தை தருகிறது என்பதையும் பிரபாகரன் அகாஷியிடம் தெரிவித்துள்ளார்.

அவசர மனிதாபிமான பிரச்சினைகளுக்கான குழு இன்று வரை உருப்படியான எந்தவொரு செயலிலும் ஈடுபடவில்லை இக்குழுமூலமாக மக்களுக்கான எந்தவிதவேலைத் திட்டமும் செய்யப்படவில்லை.

அரசாங்கம் தனக்குத் தேவையான பொருளாதார உதவிகளை பெறுவதற்காகவே அவசரப்படுகிறது எங்கள் தரப்பில் தலைவரினால் தெரிவிக்கப்பட்ட, வலியுறுத்தப்பட்ட விடயங்களுக்கு உருப்படியானபதிலை அரசு தராவிட்டால் சமாதானப் பேச்சு வார்த்தையில் கலந்துகொள்ள மாட்டோம். எனினும் டோக்கியோவில் நடைபெறவுள்ள நிதியுதவி மாநாட்டிலும், அடுத்த சுற்று பேச்சு வார்த்தையிலும் கலந்துகொள்வது குறித்தும் பரிசீலிக்க தயாராகவுள்ளோம் என்றும் பிரபாகரன் அகாஷியிடம் கூறியுள்ளார்.

அரசாங்கத்தின் ஊழல் மிகுந்த அமைச்சுக்களிடம் நிதி வழங்கப்பட்டால் அமைச்சர்கள் அல்லது அதிகாரிகள் சுருட்டிக்கொண்டு போய்விடுவார்கள் இதனை எம்மால் ஏற்றுக்கொள்ள முடியாதென்றும் தலைவர் பிரபாகரன் திட்டவட்டமாக அறிவித்துள்ளார்.எனச் செய்தி யாளர் மாநாட்டில் அன்ரன் பாலசிங்கம் தெரிவித்துள்ளார். (ம)

---

### தயாரிக்கப்பட்ட...

இலங்கை அரசாங்கமும் அதியுயர் பாதுகாப்பு வலயம் சம்மந்தமாகவே என்னிடம் கேட்டிருந்தது என்றும் கூறினார். இப்பத்திரிகையாளர் மாநாட்டின் போது முப்படைத்தளபதிகள், மற்றும் இராணுவ உயர் அதிகாரிகள் எனப்பலரும் சமுகமளித்திருந்தனர். (ந-5)

## ஜப்பான் தூதுவர் பிரதமரை சந்தித்தார்

ஜப்பானின் விசேட தூதுவர் யசூசி அகாஷி தலைவர் பிரபாகரனுடனான சந்திப்பை முடித்த கையுடன் நேற்று மாலை கொழும்புக்குத் திரும்பி பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவுடன் கலந்துரையாடியுள்ளார்.

சமாதானப் பேச்சுவார்த்தைகளில் எடுக்கப்பட்ட முடிவுகளையும், புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் வலியுறுத்தப்பட்ட விடயங்களையும் அமுல்படுத்துவதற்கு அரசாங்கம் பின்னடிக்குமாயின்,விடுதலைப்புலிகள் சமாதானப்பேச்சுவார்த்தையிலும், டோக்கியோ நிதியுதவி மாநாட்டிலும் கலந்துகொள்ளமாட்டார்கள் என விடுதலைப்புலிகளின் தலைமையினால் யசுசி அகாஷியிடம் வலியுறுத்திக்கூறப்பட்டது. விடுதலைப புலிகளினால் வலியுறுத்தப்பட இந்த விடயங்களையும் அதில் விடுதலைப் புலிகள் மிக உறுதியாக இருப்பதனையும் யசுசி அகாஷி பிரதமருக்கு எடுத்து விளக்கினார்.

## முரளியின் சாதனை

(கொழும்பு)

இலங்கை அணியின் நட்சத்திர சுழல் பந்து வீச்சாளர் முத்தையா முரளிதரன் நேற்று மற்றுமொரு உலகசாதனையை நிகழ்த்தியுள்ளார். டெஸ்ட் போட்டி ஒன்றில் 5 விக்கெட்டுக்களை 37 தடவைகள் வீழ்த்தியமையே இந்தச் சாதனையாகும். இதேவேளை நியூசிலாந்து அணியின் வேகப்பந்து வீச்சாளரான ரிச்சட் கெட்லியின் சாதனையை முரளி முறியடித்துள்ளார்.

நேற்று இலங்கைக்கும் நியூசிலாந்திற்குமிடையிலான போட்டியின் இரண்டாவது இனிங்ஸில் 39 ஓட்டங்களை கொடுத்து 5 விக்கெட்டுக்களை வீழ்த்தியதன் மூலம் ரெஸ்ட் போட்டியில் மொத்தமாக 450 விக்கெட்டுக்களை முரளி கைப பற்றியுள்ளார்.

(ந-5)

பலாலி வீதியில்
திருநெல்வேலிச் சந்தியில்
**குகன் எரிபொருள் விற்பனவு நிலையம்**
காலை 5மணி தொடக்கம் இரவு 9மணி வரை கட்டுப்பாட்டு விலையில் டீசல், பெற்றோல், மண்ணெண்ணெய், ஒயில் வகைகள் பெற்றுக்கொள்ளலாம். (C/6100)

**2வது உலக இந்து மாநாட்டையொட்டிய எழுச்சிப் பெருவிழா**

**இடம்:** சுன்னாகம் ஸ்ரீ கதிரைமலைச் சிவன் தேவஸ்தான மணிமண்டபம்.
**காலம்:** 08-05-2003 இன்று(வியாழன்)
**காலை** 7.00 - 8.00 சமய தீட்சை வழங்கல
8.00 - 12.00 ஸ்ரீ கதிரை மலைச் சிவன் தேவஸ்தானத்தில் இருந்து சிவத்திரு சிவசண்முகவடிவேல் அவர்களின் தலைமையில் இந்துசமய எழுச்சி ஊர்வலம் (சுன்னாகத்தில் பின்வரும் ஆலயங்களைத் தரிசித்தல்)

- ❖ சுன்னாகம் தெற்கு சிவபூதராயர்
- ❖ முத்துக்கிஸ்ணர் வீதி அம்பாள் ஆலயம்
- ❖ சந்தையடி முனியப்பர் ஆலயம்
- ❖ சுன்னாகம் ஐயனார், பிள்ளையார் ஆலயம்
- ❖ வரிசைப்புலம் மகமாரி அம்மன் ஆலயம்
- ❖ மயிலணி கந்தசாமி கோயில், சிவன்கோயில், அம்பாள் ஆலயம்
- ❖ சூறாவத்தை சிவ பூதராயர் ஆலயம்
- ❖ சுன்னாகம் கிழக்கு காளி அம்பாள் ஆலயம்

1.30 மகேஸ்வர பூசை

**மாலை நிகழ்வுகள்**

தலைமை
**டாக்டர் நா.சோமாஸ்கந்தக் குருக்கள்**
(சர்வதேச இந்துமத குருமார் ஒன்றியப் பிரதிநிதி அவுஸ்ரேலியா)
பிரதம விருந்தினர்
**மாண்புமிகு தி. மகேஸ்வரன்**
(இந்து கலாசார அலுவல்கள் அமைச்சர்)

பி.ப. 6.00 மங்கள விளக்கேற்றல்:-திரு. எஸ். இராமலிங்கம் (கிராம அலுவலர்)
திரு. அன்னராசா (சுன்னாகம் தெற்கு சிவ பூதராயர் ஆலயம்)
6.05 தேவாரம் :- சிவநெறிச் செம்மல் சிவசண்முகவடிவேல்
6.10 வரவேற்புரை:-திரு. மு. செல்வஸ்தான் (அதிபர்)
6.15 ஆசியுரையும் தலைமையுரையும்:-டாக்டர் நா. சோமாஸ்கந்தக்குருக்கள்
6.30 தொடக்கவுரை:-திரு. தி. தேவராஜன் (உதவிப் பிரதேச செயலர் - உடுவில்)
6.45 பிரதம விருந்தினர் உரை:- மாண்புமிகு அமைச்சர் தி. மகேஸ்வரன்
7.00 சிறப்புரை:-திரு. த. தற்பரானந்தன்
(ஓய்வு பெற்ற கோட்டக் கல்விப் பணிப்பாளர்)
7.15 " :-திரு. சி. குமரவேல் (தலைவர் ப. நோ. கூ. சங்கம் சுன்னாகம்)
7.30 " :-திருமதி. தி. மங்கையர்க்கரசி (ஓய்வு பெற்ற அதிபர்)
7.40 சமயப் பேருரை:-பேராசிரியர் இரா. செல்வக்கணபதி (சென்னை)
முனைவர் அ. மலர் (தமிழ் விரிவுரையாளர், அறிஞர் அண்ணா கலைக் கல்லூரி)
நன்றியுரை:- செல்வி ந. யோகேஸ்வரி (யாழ். பல்கலைக்கழக கலைப் பீடம்)

ஸ்ரீ கதிரமலைச் சிவன்
தேவஸ்தானம், சுன்னாகம் (C/6115) அமைப்புக்குழு

நியந்த்ரீ அனுசரணையுடன்
**எழுந்திரு விழித்திரு**
சுவாமி விவேகானந்தரின் சித்திரப்படங்களும் நூல்களும்
**கண்காட்சி**
இடம் :- நல்லூர் ஆதீன கலாமண்டபத்தின் முன்பாக
காலம:- 09,10-05-2003 (காலை 9.00-மாலை5.00வரை)

இந்து நாகரிகத்துறை
இந்து மன்றம்
யாழ். பல்கலைக்கழகம்

சுவாமி சித்ரூபானந்தா
ஸ்ரீ சாரதா சேவாச்சிரமம்
பருத்தித்துறை (C/6114)

**கண்ணீர் அஞ்சலி**

மலர்வு
06 - 09 - 1948

உதிர்வு
07 - 05 - 2003



**ஐயாத்துரை குலசிங்கம்**
(உரிமையாளர் குலம் கிறீம் ஹவுஸ்)

எங்கள் இதயத்தில் நிரந்தரமாய் சங்கமித்த ஐயனே!
ஒரு கூண்டில் ஒன்றாய் இனிமையாய் பேசிய
அந்த நினைவுகள் எம் நெஞ்சங்களில் நினைவாட....
ஐயனே! எங்கு சென்றாய் கடமையில் ஆசானாய்
கருணையில் தந்தையாய் உதவியில் நண்பனாய்
எத்தனை வடிவங்கள் உங்கள் அன்பு உள்ளத்தில் ஊற்றெடுத்தன.
ஆனால் இன்று உங்கள் அமைதியான துயில்
ஓ! காலத்தின் கட்டளையா?
நேற்றிருந்தவர் இன்றில்லை இதுதான் நிஜமானால்
ஐயனே! நீங்கள் பரமனடியில் இருக்க இறைஞ்சுகின்றோம்
இதயத்தின் நெருடலோடு.

ஊழியர்கள்
மானிப்பாய், யாழ்ப்பாணம் (C/6116) குலம் கிறீம் ஹவுஸ்

**வாடகைக்குத் தேவை**
**இலங்கை சிமெந்து கூட்டுத்தாபனம் யாழ்ப்பாணம்**

அலுவலகப் பாவனைக்குரிய கட்டடம் ஒன்று உரிய வசதிகளுடன் யாழ். நகரப் பகுதியிலோ அல்லது அதனை அண்டிய பகுதியிலோ உடன் வாடகைக்குத் தேவை.

இரண்டு வருட காலப் பகுதிக்குக் குறையாமல் ஒப்பந்தத்தின் மூலம் வழங்கக் கூடியவர்கள் 23-05-2003ற்கு முன்னதாகப் பின்வரும் முகவரியில் தொடர்பு கொள்ளவும்.

பொறுப்பதிகாரி
யாழ். அலுவலகம்
இலங்கை சிமெந்து கூட்டுத்தாபனம்
65, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம் (C/6112)

**மரண அறிவித்தல்**

**ஐயாத்துரை - குலசிங்கம்**
(உரிமையாளர் - குலம் கிறீம் ஹவுஸ்)
மானிப்பாய், யாழ்ப்பாணம்

ஊர்காவற்துறை புளியங்கூடலைப் பிறப்பிடமாகவும், மானிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட ஐயாத்துரை குலசிங்கம் அவர்கள் புதன் கிழமை 07-05-2003 அன்று காலமாகிவிட்டார். அன்னார் காலஞ் சென்ற ஐயாத்துரை சிவயோகம் தம்பதிகளின் அன்புப்புதல்வனும், செல்வராணியின் அன்புக்கணவருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஆலடிச் சந்தி
மானிப்பாய்

தகவல்
மனைவி கு. செல்வராணி (C/6113)

இப் பத்திரிகை வலம்புரி அன். கோ ஸ்தாபனத்தாரால் இல.15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 08.05.2003 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.